[illegible]

V.6 No.49 14 Dec 1933

m211, N28KN
N33.6.49.
189173

979

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 6.] 1933 ஹ டிஸம்பர் மீ 14உ [No. 49

23 MAY

## பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 869

2. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவரங்கக் கலம்பகம் 871

3. யாப்பிலக்கணம்—விருத்தங்கள்
வித்துவான், M. V. வேணுகோபாலப் பிள்ளை 873

4. அப்பர் (64 கலை-வியாகரணம்-யாப்பு)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 875

5. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 2-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 877

6. கம்பராமாயணம்—(கவந்தப் படலம்)
T. N. சேஷாசலம், B.A.B.L. 880

7. காற்றுமழை (ஆராய்ச்சி)
Shakespeare's Tempest 882

8. வர்த்தமானம் 884

## கலாநிலயம்

### புறங்கை இன்பம் 2.

சுற்றிச்சுற்றித் திரிந்தாலும் மீண்டும் மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே கொணர்ந்து சேர்க்கும் சுழல் வழியே போன்றது ரால்ப் வால்டோ ட்ரைன் அறிவுறுத்திய அக்கொள்கை. தன் காரியமே பெரியகாரியமென்றும், பேரும் செல்வமும் செல்வாக்கும் சுகமும் இன்பமும் தான்தான் அடையவேண்டுமென்றும், மனிதர் அலைகின்றபடியாற்றான், ஒருவரும் ஒன்றும் எய்தாமல் அவலமடைகின்றனரென்றும் பகர்கின்ற இவர், இதனைவிட்டுப் பிறருடைய இன்பநலன்களுக்கு இயன்றவைகளை இயற்றும்படி நம் வழியினை மாற்ற முயல்கின்றனரேயொழிய, நம் உள்ளத்திருந்த கருத்தின் நோக்கத்தை அவருடைய சொற்கள் தீண்டாமலே விட்டுச்செல்கின்றன. "உன்னுடைய இன்பத்தை நேர்முகமாகநாடுவாயாயின் அதனை அடையமாட்டாய் ஆதலால், அதனைப்பிறர்பால் ஓட்டிவிடு; ஓட்டிய அவ்வின்பம் பிறகு உன்னைப் பின்னுறத் தொடர்ந்துவந்து முன்னிலும் ஆயிரம் மடங்கு அதிகமான அளவுடன் உன்னைச்சேர்ந்துகொள்ளும்" என்னும் இது, "உண்மையிற் சிறந்தவோர் உபாயம் இல்லை" என்றும், "மற்றவர் உன்பால் எவ்வண்ணம் நடந்துகொள்ளவேண்டும் என்று விழைகின்றாயோ அவ்வண்ணமே நீயும் பிறர்பால் நடந்துகொள்" என்றும், பகர்வதுபோன்றவோர் முதுசூழ்ச்சியேயன்றி வேறன்று. இதனில், 'நீ நாடும் இன்பத்தை அடைய முயல்வாயாக' என்னும் அநுமதியுளது; 'நெறிதான் வேறு கூறுகின்றேன்' என்பார் இவர். அந்நெறி யாதெனில், பிறருக்கு அவ்வின்பத்தை நல்கி நடத்தல். செல்வம் செல்வாக்கு அனையவைகளுக்கும் இக்கருத்தே அமையும். நினைவுதான் ஒன்றேயாகுங்கால் நெறி வேராவதால், இவ் வான்மசம்பந்தமான விடயங்களில், விளைவு வேறாகும் என்று எண்ணுதல் அரிது. "இவ்வுலகில் எல்லாச் சீவன்களும் இன்பநலசுகங்களை அடைவதற்கே அவாவுகின்றன. மற்று, நன்னெறி நாடாமல் தீநெறி நயத்தலால், எண்ணிய இன்பத்திற்கு மாறாகத் துன்பமே சூழ்கின்றது. ஆதலின், தீவினை ஓம்பி நல்லனசெய்ய நினைமின்; அப்பொழுதே இன்பம் பெறுவீர். "அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம் புறத்த புகழும் இல" என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் இயம்பி இருக்கின்றாரன்றோ" என்று தற்காலப் பள்ளிக்கூடக் கழகங்களில் வாய்க்குவாய் பிள்ளைகளும் ஆசிரியர்களும் நிகழ்த்துகின்ற கட்டுரையின் மட்டத்தினின்று ரால்ப் வால்டோ ட்ரைன் போன்றவர்தம் ஆசிரியம் ஒன்றும் உயரவில்லை. அறத்தான் வருவது இன்பம் என, வள்ளுவர் இன்பத்திற்கு இலக்கணம் கூறினாரன்றி, இன்பத்தைத் தேடியடைகின்ற நெறியினை யாதும் வகுத்திலர். மறத்தால் இன்பம் வாராது என்ற அளவே அக்குறள் வற்புறுத்துகின்றது. இன்பமேனும் மற்றெதனையேனும் அறத்தாறு ஒழுகிப் பெறுவதற்கு அவர் கற்பிக்கவில்லை. இன்பம் இல்லை என்றாலும் அறத்தினையே செய்யும்படி அவர் வற்புறுத்துகின்றார். இச் செம்மையின் தூய்மையை உட்கொண்டு.

நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று

என்று அப் புலவர்பெருந்தகை நவின்ற செம்மையை மறக்கலாமோ. இத னெதிர்வைத்து ஒப்புநோக்குங்கால் ட்ரைன் விளம்பிய அக் கொள்கையின்கதி என்னவாம்! "பிறருக்கு இன்பம் முதலியன நல்குதற்கு

நினைப்பதன்றி உன்னுடைய இன்பத்தை நாடாதே" என்றவரையில் ட்ரைன் சொல்வது நேர். மற்று, "நீ அப்பொழுதுதான் உனக்கு வேண்டிய இன்பத்தை அடைவாய்" என்று முடிக்குங்கால், முன்னையதன் செம்மை எல்லாம் முற்றிலுந் தேய்ந்துவிடுகின்றது. "உன்னால் விரும்பப்படுகின்ற இன்பத்தை நேராக உனக்கே தேடிக்கொள்ளுதல் நல்லாறு அன்று; பிறருக்குச் செய்யும் வகையில் உன்னுடைய இன்பத்தை மறைமுகமாக நாடிக்கொள்ளுதல் நல்லாறு ஆகும். ஏனெனில் அதனால் நீ இன்பம் பெறமாட்டாய், இதனால் பெறுவாய்" என்ற இக் கொள்கையை அத் திருக்குறள் நேராக எதிர்த்து மறுக்கின்றதென்பதை அறிந்துகொள்ளுதல் மிகமிக எளியதே. மற்றவர்க்கு இன்பம் செய்யுமாற்றால் உனக்கு இன்பம்வருவதாயின் அவ்வின்பத்தையுங் கொள்ளல் தீது என்றும், மற்றவர்க்கு இன்பஞ் செய்வதால் உனக்கு இன்பம் வராது என்பது நிச்சயமாயினும், நீ மற்றவர்க்கு இன்பம் செய்தலே நன்று என்றும், இயம்புகின்ற இதன் பெருமையைச் சிந்திக்குங்கால், "நீ வேண்டும் இன்பம் கைகூடும்பொருட்டு மற்றவர்க்கு இன்பம் செய்" என்ற செய்தியில் சிறுமையே சாலத் தெரிகின்றது. எனினும் மெய்யுணர்வுடைய வள்ளுவர்தம் பெருமைக்கு அயல்நிற்பதால் இந்தச் சூழ்ச்சி சிறியதாகத் தோன்றுகின்றதேயன்றி, வேறு எத்தனையோ சிறுமைகளுக்கு அயலே நின்று இது பெருமையுறத் தோன்றும் என்பதை மறத்தலாகாது.

"உனக்குத் தீங்கு வருமாதலால் நீ மற்றவர்க்குத் தீங்கு செய்யாதே" என்ற அறிவினைப் புகட்டுவதைக் காட்டிலும், "பிறருக்குத் தீங்குசெய்தால் நீ சுகம் அடைவாய், எனினும், பிறருக்கு அது வருத்தம் தருமாகையால் அத் தீங்கினைச் செய்யாதே" எனச் சாற்றி இக் கருத்திற்கு நமது வாழ்க்கையை இசையும்படி செய்வது எத்தனையோமடங்கு உயர நம்மை உய்த்துச் செல்வதாகும். இவ்வாசகத்தின் மறுபுறத்தினை நன்மையைப்பற்றிச் சார்த்துங்கால் அதன் உயரம் பின்னும் பலபடி அதிகமாகின்றது. "பிறருக்கு இன்பம் செய்யப்புகுவதால் உனக்குக் கிடைக்கும் ஊதியம் துன்பமே; மற்று, உன்னுடைய இன்பத்தையே நீ நேராக நாடுவாயாயின் யாதும் ஐயமின்றி அவ்வின்பம் உனக்கு வாய்க்கும்; ஆயினும் உன்னுடைய இன்பத்தை நாடாமல் பிறருடைய இன்பத்தை நாடிச் செய்து அதனால் கிடைக்கின்ற துன்பத்தையே நீ ஏற்றுக்கொள்" என்ற சீரிய கொள்கைக்கு நம்முடைய இதயம் உவந்து இணங்கப் பயிலுமாயின் அப்பொழுது அன்றே வீரவாழ்க்கையின் எல்லைக்குள் எய்தியவராவோம். இத்தகைய வீரமில்லா வாழ்க்கையெல்லாம் வணிகமேயன்றி வேறன்று. இவ்வீரமே வண்மையென வழங்கப்படும். மேலுலகம் இல்லெனினும் ஈகின்ற மேன்மை அது. சான்றோர் சிந்தனை இதுவே. இதனைப் பிறர் பின்பற்றுங்கால் அதுவே மரபாகிவிடுகின்றது.

கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய ஆய் என்பவனை, ஏணிச்சேரி முடமோசியார்,

> இம்மைச் செய்தது மறுமைக் காமெனு
> மறவிலை வாணிக னாஅ யல்லன்
> பிறருஞ் சான்றோர் சென்ற நெறியென
> ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே

[இப்பிறப்பில் செய்தது மறுபிறப்பிற்கு உதவும் என்று கருதி, தன் அறத்தினை மறுமையின்பத்தின் பொருட்டு இலாபத்திற்கு விற்கின்ற ஓர் வாணிகன் ஆய் அல்லன். சான்றவர்களாகிய பிறர்சென்ற நெறி இதுவெனக் கொண்டு, அந்த வழியே ஒழுகியது அவன் கை வண்ணம்]

என்று பாடியபாட்டு நாம் இதுகாறும் உரைத்துவந்த விடயத்தைச் செவ்விதியின் விளக்கவல்லது. இதனினும் உயரியவோர் இயன்மொழி இயம்புதல் எளியதன்று. ஆய் என்பவன் மறுமையின்பத்தைக் கருதினானல்லன் என்னும் அளவில் இம்மையி லின்பத்தைக் கருதி அவன் அறஞ்செய்யாமை சொல்லாமலே பெறப்படும். எனின், ரால்ப் வால்டோ ட்ரைன் என்பவரால் வற்புறுத்தப்பெறுகின்ற அந்தக் கொள்கைபோன்ற தொன்று அறவிலை வாணிகத்துள்ளேதான் அடங்குமென்பதை விளம்பவேண்டுமோ. மற்று, ஆய் கைவண்மை அமைந்தவாறு எவ்வாறெனின், "பிறருஞ் சான்றோர் சென்ற நெறி" அது வென்னும் அமைதியல்லால் வேறு எண்ணம் இல்லாமையே. அதுவே அதன் அருமையாம்.

அறமெனப்படுகின்ற அனைத்தும், இவ்வண்ணம், முன் சான்றோர்சென்ற நெறி செல்லுமொரு தன்மையிலேயே நடத்தப்பெறவேண்டும். இவ்வாறின்றி, "உன்னுடைய இலாபத்தைக் கருதி ஒன்றும் செய்யற்க, அப்பொழுதுதான் நீ விரும்பிய இலாபத்தைப் பெறுவாய்" என்ற புணர்ப்பினால் பரோபகாரங்கள் புரிய விரைதல், பேரின்றிப் பெருகுமொரு சுயநய சிந்தையேயன்றி வேறன்று. நேராக ஒருவன் தன்னுடைய இன்பத்திற்கே உரியன முயன்று பெறுதல் அதனைத் தன் உள்ளங்கையில் வாங்கிக்கொள்கின்ற இயற்கையாம். இதற்கெதிர், பிறருக்கு இன்பம்செய்து, அதனின்று தனக்குப் பெருகிவரவேண்டிய இன்பத்தை வழிநோக்கிப் பார்த்திருத்தல் புறங்கையை நீட்டியொன்று இரப்பதை ஒக்கும். தன் அகங்கையால் பிறருக்கு எடுத்தளித்த இன்பமானது பிறகு தன் புறங்கையில் விழுந்து பெருகுவதற்குக் காத்திருப்பான் ஒருவன் நிலை காணத் தகுந்த காட்சியன்று.

ஆம், நமக்கு மனமென்பதொன்று இருக்க, அது விளைவினை நினைக்காமல் என்ன செய்யும்? எல்லாருமே மனதற்றவோர் பரிசுத்த நிலையை எய்திவிடுவதென்பது இயலுமோதான்? என்று இன்னபல ஐயங்கள் தோன்றி உண்மையாய உயர்வினை உட்கொள்ள மாட்டாத இடையூறுகள் செய்யலாம். அறிவினைத் தொடர்ந்து ஆராயுங்கால் இவ்வகை ஐயங்கள் பின்னும் வலிவடையும். உயரிய உணர்வினது ஊக்கத்திற்கோ இந்த ஐயங்கள் இல்லை. ஆதலின், உள்ளுணர்வானது உறுதியடையும் நெறிகளை நாடினால், ஆய் என்னும் அவ்வள்ளலின் சீரிய அழகுடைய தன்மையை அனைவரும் எய்துவார். உணர்வின் உறுதிக்கு உரிய மருந்து கலைகள். அழகே அதன் ஆதாரம், ஊதியம் அன்று. ஒருவருக்கு ஒன்றை எடுத்துக் கொடுக்குங்கால் நம்முடைய புறங்கையே நம் கண்களுக்குத் தென்படுகிறது. அப்பொழுதே அதன் தோற்றம் அழகாகவும் இருக்கும். அவ்வாறின்றி, ஒன்றினைப் பெறுவதற்குப் புறங்கையைக் காட்டுவது எத்துணை விகாரமென்று இயம்பவேண்டுமோ. ஊதிய நினைவினின்று நம் உள்ளத்தைப் பிரித்துக் காக்கின்ற கலைகளின் பயிற்சியால், அழகையே தழுவிக்கொண்ட நம் வாழ்க்கை



யானது, ஈகையையே இயற்கையாக எய்தப்பெறும். இவ்வுலகின் அளவைகளின்படி 'பயன்' என்பதொன்று இல்லாத செவ்வியது அழகு என்னும் அத் தத்துவமே. அதனோடு பழகப்பழக நம் மனம் அதுவேயாய் முடியாமல்வேறு யாவதாக இயலும். கலைகளின் நலங்கனிந்த உள்ளமானது தான் அழகியதொன்று செய்யநேர்கின்ற உவகையில் தோய்ந்திருக்குமல்லது, ஏனதனைச் செய்கின்றோம், என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு ஆராயப் புகுந்திடாது. இருப்பதே செய்வதே அதன் அழகாகுமன்றி, அதனின்று வருமொரு பயனால் சிறப்படைவதில்லை. இதுதான் சிருஷ்டி, மற்றவெல்லாம் செய்கை, நம் கவிவரர் இரவீந்திரர்,

The joy of unity within ourselves, seeking expression becomes creative; whereas our desire for the fulfilment of our needs is constructive. The water vessel taken as a vessel only, raises the question, "Why does it exist at all?". Through its fitness of construction, it offers the apology for its existence. But where it is a work of beauty it has no question to answer; it has nothing to do, but to be. It reveals in its form a unity to which all that seems various in it is related that, in a mysterious manner, it strikes sympathetic chords to the music of unity in our own being.

என்று சாற்றிய செம்மை என்றும் மறக்கற்பாலதன்று. இந்நினைவைக் காப்பதல்லால் இக் கலாநிலயம் வேறொரு கருமத்தைக் கைகொண்டதுமன்று.

# தமிழ்ப்பாடம் 99.

## அஷ்ட பிரபந்தம்—திருவரங்கக் கலம்பகம்

[862-வது பக்கத் தொடர்ச்சி]

> மறக்குமோ காவின் மதுவருந்தி யப்பாற்
> பறக்குமோ சன்னிதிமுன் பாமோ—சிறக்கத்
> தருவரங்கள் கேட்குமோ தாழ்க்குமோ நெஞ்சே
> திருவரங்கர் பாற்போன தேன்.

பதவுரை:—நெஞ்சே - என்மனமே! திருவரங்கர் பால் - திருவரங்கரிடத்தில், போன - (என்காதலை உரைக்கும்பொருட்டுத் தூதாகப்) போயிருக்கின்ற, தேன் - வண்டானது,

மறக்குமோ-தான் செல்கின்ற காரியத்தை மறந்து வழியிலேயே தங்கிவிடுமோ! (அல்லது) காவில் - சோலையில், மது - தேனை, அருந்தி - குடித்து, (அந்த வெறியினால்) அப்பால் - அரங்கத்தைக் கடந்து அப்பாலும், பறக்குமோ - பறந்துவிடுமோ! (வழியிலும் நின்றுவிடாமல் அப்பாலும் போகாமல் அரங்கநகரே அடைந்தாலும்) சன்னிதி முன்பு - அவரது சன்னிதிக்கு எதிரில், ஆமோ - போய் நிற்கத் துணியுமோ! (அப்படிப் போய் நின்றாலும்) சிறக்க - எனக்குச் சிறப்புண்டாகும்படி, தரு - அவர் கொடுக்கக்கூடிய, வரங்கள்-வரங்களை, கேட்குமோ - (அவரைக்கண்ட அச்சத்தினாலும் அதிசயத்தாலும்) கேட்பதற்கு அவ்வண்டிற்கு வாய் வருமோ! (அல்லது, இதுவெல்லாம் செய்தாலும், திரும்பிவர) தாழ்க்குமோ-காலதாமதம் செய்யுமோ! (தெரியவில்லையே.)

கருத்து:—வண்டினைத் தூதுபோக்கிய ஓர் தலைவி அதன் செய்கைகளைப்பற்றிப் பற்பலவாறு ஐயுறுவாள். அந்த நிலையில் கவி தன்னை வைத்துக்கொண்டு தன் நெஞ்சொடு கூறினர்.

---

> தேனமருஞ் சோலைத் திருவரங்க ரெப்பொருளு
> மானவர்தா மாண்பெண் ணலியலர்கா ணம்மானை
> யானவர்தா மாண்பெண் ணலியலரே யாமாகிற்
> சானகியைக் கொள்வாரோ தாரமா யம்மானை
> தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தா லம்மானை.

பதப்பிரிவு:—தேன் அமரும் சோலை திரு அரங்கர் எ பொருளும் ஆனவர் தாம் ஆண் பெண் அலி அலர் காண் அம்மானை ஆனவர் தாம் ஆண் பெண் அலி அலரே ஆம் ஆகில் சானகியை கொள்வாரோ தாரம் ஆய் அம்மானை தாரம் ஆய் கொண்டதும் ஓர் சாபத்தால் அம்மானை.

பதவுரை

தேன் - வண்டுகள், அமரும் - தங்கியிருக்கின்ற, சோலை - சோலைகளையுடைய, திரு அரங்கர் - திரு அரங்கத்திலிருக்கும் எம்பெருமான், (நிகிலத்திலுள்ள) எ - எல்லா, பொருளும் - பொருள்களும், ஆனவர்தாம் - ஆனவர் ஆயினும் அவர், ஆண் - ஆணேனும், பெண் - பெண்ணேனும், அலி - அலியேனும், அலர்காண்-ஆகமாட்டார்—அம்மானை-அம்மானை. (என அம்மானை ஆடுகின்றவர்களுள் ஒருத்தி பாட, மற்றொருத்தி அவ்வுரையை அயிர்த்து)

ஆனவர்தாம்-அப்படி எல்லாப் பொருளுமாயிருக்கின்றவர், ஆண் - ஆணேனும், பெண் - பெண்ணேனும், அலி - அலியேனும், அலரே - அல்லாதவரே, ஆம் ஆகில் - ஆவாரானால், சானகியை - சீதையை, தாரம் ஆய் - மனைவியாய், கொள்வாரோ - திருமணம் செய்துகொள்வாரோ! — அம்மானை - அம்மானை, (என்று தொடரவும், வேறொருத்தி, இதனை மறுத்து)

தாரமாய் - அவ்வாறு சீதையைத் தன் மனைவியாய், கொண்டதும் - மணந்துகொண்டதும், ஓர் - ஒரு, சாபத்தால் - சாபத்தின் காரணமாகவே, அம்மானை-அம்மானை! என்று (முடிக்கின்றாள்.)

விரிவுரை:—எங்கெங்குமயமான ஸ்ரீரங்கநாதனது வைபவத்தைச்சொல்லி மூன்று மங்கையர் அம்மானை ஆடுகின்றனர். வடமொழி இலக்கணத்தில் புல்லிங்கம், ஸ்திரீலிங்கம், நபும்ஸக லிங்கம் எனப் பால்கள் மூன்று. இவைகளை முறையே, ஆண்பால் பெண்பால் அலிப்பால் எனத் தமிழிற் சொல்லலாம். உலகத்திலுள்ள பொருள்கள் அனைத்தும் இம்மூன்று பால்களில் அடங்கவேண்டும். விஷ்ணுவை ஆண்பால் என்பதற்கில்லை—ஏனெனில், எல்லாம் அவனேயாயிருத்தலின், பெண்ணும் அவனே, அலியும் அவனே. அவ்வாறே அவனைப் பெண்பால்என்பதற்கும் இல்லை, அலிப்பால் என்பதற்கும் இல்லை. எனவே, அம்மானை ஆடுகின்றவர்களுள் ஒருத்தி, "மற்றப் பொருள்கள் எல்லாம் ஒரு பால்பாகுபாட்டிற்குள் அடங்கக் கூடியனவாயிருக்க, இந்தத் திருவரங்கனுக்கு இலக்கணம் இல்லை பார்", என்று புகழாப் புகழ்ச்சியாய் அவன் எல்லாமாயிருக்கின்ற பெருமையைப் பாராட்டுகின்றாள். மற்றவள் அம்மானைக்கர் யாட்டத்தைத் தன்கையில் மாற்றிக்கொண்டவளாய்ச், "சீதையை மணந்த

படியால், அவன் ஆண்மகனாகி அன்றோ இருத்தல் வேண்டும்" என உரைக்கின்றனள். மூன்றாமவள் அம்மானை ஆட்டத்தைத் தன் கைக்கு மாற்றிக்கொண்டு, "சீதையை மணந்த அவ்வொரு காரணத்தினாலேயே அவனை ஆண்என்று நிச்சயிக்கவேண்டா—சீதையை அவன் தாரமாய்க் கொண்டது ஒரு சாபத்தால் அன்றோ" என, இரண்டாமவள் மறுப்பை மறுத்து முதலவள் முடிவிற்குச் சார்பாகப் பேசுகின்றனள். சாபம் என்னும்இச்சொல்வடமொழி. அதனைத்தமிழில்எழுதும்போது அது சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி சபித்தல் என்றேனும், வில் என்றேனும் பொருள்படலாம். இந்தச் செய்யுளில் இரட்டுற மொழிதலாக இவ்விருபொருள்களும் பொருந்தி யிருக்கின்றன. "சனகன்பால் இருந்த சிவனது வில்லை முறித்தான்; அவ்வாறு முறித்தது சீதையை மணக்கவேண்டுமென்று ஒரு ஆண்மகனுக்கு இருக்கக்கூடிய ஆர்வத்தால்அன்று. தன்னுடைய திறமையைக் காட்டுதற்கே அது செய்தான். அதனால், அவ்வில்லிற்குப் பரிசிலாக அமைந்திருந்த சீதையை அவன் மணக்கவேண்டி நேர்ந்தது" என்பது ஒரு பொருள். மற்றது பின்வருமாறு:—அசுரர்களது குருவாகிய சுக்கிராசாரியரின் தாயும் பிருகுப் பிரஜாபதியின் மனைவியுமாகிய கியாதி யென்பவள், முன்ஒருசமயம் தேவாசுரயுத்தத்தில் அசுரர்களுக்கு அடைக்கலம் கொடுத்துக் காக்கவே, திருமால் அவளைக் கொன்றுவிட, பிருகுமுனிவர் கோபங்கொண்டு திருமாலை, "நீ பத்துப்பிறவி எடுக்கக்கடவாய்" என்று சபித்துவிட்டனர். (பிறவி எடுப்பதுமல்லாமல், 'நீயும் என்போல் மனைவியைப் பிரிந்து வருந்தக்கடவாய்" என்று சபித்தாரென்றும் கூறுவார்.) அச்சாபத்தை நிறைவேற்றவே எடுத்த பிறவிகளில் ஒன்றில், ஆணாகப் பிறக்கவும், சீதையை மணக்கவும் நேர்ந்தன வல்லாமல் திருவரங்கன் இயற்கையில் ஆண் பெண் அலி ஒன்றுமல்லன். சாபத்தின்படி சீதையைப் பிரிவதற்கே தாரமாய்க் கொண்டான்; ஆண்மகனென்ற தன்மையில் மணந்தவ னல்லன்.

அம்மானை அம்மானை என்று முடிவது ஆட்டத்தில் அவளவள் தன் பாட்டைச் சொல்லி முடிக்குஞ் சொல்.

---

மானையெய்தவரின்னமென்மடமானையெய்திலர்நேமியால்
மாலைதந்தவர்பைந்துழாய்மதுமாலைதந்திலரிந்திரன்
சோனைமாரிவிலக்கிவிட்டவர்சொரிகண்மாரிவிலக்கிலார்
சுரர்களுக்கமுதங்கொடுத்தவர்சோதிவாயமுதங்கொடார்
தானையைவர்கொடிக்களித்தவர்தானைகொண்டதளிக்கி
சங்கரற்கிரவைத்தடுத்தவர்தையலுக்கிரவைத்தடா[லார்
ரானைமுன்வருமன்புளார்முலையானைமுன்வருமன்பிலா
ரணியரங்கர்நடத்துநீதியநீதியாகவிருந்ததே. 11.

கருத்து:—காதலன் வந்து சேரப்பெறாமையால் வருந்துகின்ற தன் மகளைப்பார்த்துத் தாய் இரங்கி அவனது இயற்கையைப் பழிப்பவள்போலத் திருவரங்கனதுபுகழ்இங்குப் பாடப்பட்டிருக்கின்றது. சிலேடையின் நயங்களை இச்செய்யுளில் நன்கு காணலாம்.

பதவுரை.

மானை - மாரீசனாகிய மானை, எய்தவர் - அம்பால் எய்தவர், இன்னம்-இன்னம், என்-என், மட - இளமை பொருந்திய, மானை - மான் போன்ற மகளை, எய்திலர் - சேர்ந்திலர். நேமியால் - தன் சக்கிராயுதத்தால், மாலை - (பாரதயுத்தத்தில், சூரியனை மறைத்து, சயத்ரதன் அர்ச்சுனன்முன் வரும்பொருட்டு) மாலைப்பொழுதை, தந்தவர் - விளைவித்தவர், பை - பசுமையான, துழாய்-துளசியால் ஆகிய, மது-தேன் பொருந்திய, மாலை - மாலையை, தந்திலர் - (என் மகளிற்கு) கொடுத்திலர். இந்திரன் - இந்திரன் விடாது பெய்வித்த, சோனைமாரி - பெரு மழையை, விலக்கி விட்டவர் - (மலையைக் குடையாய்ப் பிடித்து) தடுத்தவர், (என் மகள்) கண் - கண்களிலிருந்து, சொரி - சொரிகின்ற, மாரி-மழையை, விலக்கிலார் - நீக்கினார் அல்லர். சுரர்களுக்கு-தேவர்களுக்கு, அமுதம்-(பாற்கடல் கடைந்து) அமிர்தத்தை, கொடுத்தவர் - கொடுத்தவர், (என்மகளுக்குத் தன்) சோதி-ஒளிபொருந்திய, வாய் - வாயிலிருந்து வரும், அமுதம் - சொற்களாகிய அமிர்தத்தை, கொடார் - கொடுக்கமாட்டார். ஐவர் - பஞ்சபாண்டவர்களது, கொடிக்கு - மனைவிக்கு, தானை - (அவிழ்க்க அவிழ்க்க வளரும்படி) வஸ்திரம், அளித்தவர் - கொடுத்தவர், (என்மகளிடத்திலிருந்து கவர்ந்துகொண்ட) தானை - வஸ்திரத்தை, அளிக்கிலார் - திருப்பிக்கொடுத்திலர். சங்கரற்கு - பரமசிவனுக்கு, இரவை - பிச்சையெடுப்பதை, தடுத்தவர் - நீக்கினவர், தையலுக்கு - என்மகளுக்கு, இரவை-(காமநோயைப் பெருக்குகின்ற) இராக்காலத்தை, தடார் - தடுத்திலர். ஆனை முன் - கஜேந்திரன் முன், வரும்-காப்பாற்றவரும், அன்பு உளார்-அன்புடைய அவர், முலை-முலைகளைக் கொம்பாகஉடைய, ஆனை - ஆனைபோன்ற என்மகளுக்கு, முன் - எதிரே, வரும் - வரவேண்டு மென்னும், அன்பு இலார், அன்பு இல்லாதவராயினர்—

(இவ்வாறு எல்லாம் தெரிந்து செய்யக்கூடியவராயிருந்தும், என் மகளின்பொருட்டு அவை யொன்றுஞ் செய்யாமல்) அணி - அழகிய, அரங்கர் - திருவரங்கநாதர், நடத்தும் - நடத்துகின்ற, நீதி - நீதியெல்லாம், அநீதி ஆக - அநீதியாகவே, இருந்ததே-இருக்கின்றதே.

---

சேவடியான் மூவடிமண் தென்னரங்கத் தம்மானீ
மாவலிபால் வாங்கியநாண் மண்ணுலகோ-மூவுலகும்
வீசுங்கா லோவலிய வெவ்வினையே னெஞ்சமோ
பேசுங்கா லேதோ பெரிது. 12.

பதவுரை.

தென் - தெற்கிலுள்ள, அரங்கத்து - திரு அரங்கத்து, அம்மான் - பெருமானே! நீ - நீ, மாவலிபால்-மகாபலியினிடத்தில், மூ - மூன்று, அடி - அடி, மண் - நிலத்தை, சே - (உனது) சிவந்த, அடியால் - பாதத்தால், வாங்கிய நாள் - (அளந்து) வாங்கிக் கொண்டகாலத்தில், மண் உலகோ-இந்தப்பூமியோ, (அல்லது) மூ - மூன்று, உலகும் - உலகத்திலும், வீசும் - செலுத்திய, காலோ - உன் பாதமோ, (அல்லது) வலிய - வன்மையுடைய, வெம் - கொடிய, வினையேன் - வினைகளையுடைய எனது, நெஞ்சமோ - மனதோ, பேசுங்கால் - சொல்லுமிடத்து, ஏதோ - எதுவோ, பெரிது - பெரியது, (இயம்புவாய்.)

கருத்து:—"உலகமோ மிகப்பெரியது. அதனை உள்ளடக்கிய அரங்கன் பாதமோ பின்னும் பெரியது. அப்பாதமானது என் மனத்திற்குள் அடங்கியிருத்தலால் என் மனம் அப் பாதத்தினும் பெரியது", என்று கவி மகிழ்கின்றார். இவ்விதம் ஒன்றைவிட ஒன்று அதிகம்



என்று கூறுவது, சாராலங்காரமென்னும் மேன்மேலுயர்ச்சி அணியாம். இதன் இலக்கணத்தை முன் (6 வது வால்யூம், 648வது பக்கம்) விளக்கியுளோம்.

---

## இலக்கணம்

நிலைமொழி ஈற்று உகரம் வருமொழி முதல் உயிரோடு புணரும்வகை யாதெனப் பார்த்தோம். அது, நெடிற்றொடர் உயிர்த்தொடர் வன்றொடர் மென்றொடர் இடைத்தொடர் ஆய்தத்தொடர், என்ற அறுவகைக் குற்றியலுகர ஈற்று மொழிகளுக்கும் பொதுவாகப் பொருந்தும். எனினும், நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களும், மென்றொடர்க் குற்றியலுகரங்களும் புணரும்போது சிறப்பாகக் கருதவேண்டிய விதிகள் ஒன்றிரண்டு உண்டு.

I. ட் அல்லது ற் என்ற மெய்களின்மேலேறிய குற்றியலுகரங்கள், நெடிற்றொடர்க் குற்றியலுகரமாகவேனும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாகவேனும் இருக்குமாயின், வருமொழிமுதலுயிருடன்புணரும்போது, அவ்வுகரங் கெட்டு வருமொழிமுதல் உயிர் அம்மெய்களின்மேல் ஏறிக்கொள்வதும் அல்லாமல், நிலைமொழியில் அந்த ட் ற் என்ற மெய்களும் சிற்சில சமயம் இரட்டும்:—

1 (a) நாடு காடு வீடு, என்பனபோன்றவை ட் என்னும் மெய்யின்மேல் ஏறிய நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தை ஈற்றில் உடைய சொற்கள்.

(b) ஆறு நாறு சேறு, என்ற சொற்கள் ற் என்னும் மெய்யின் மேல் ஏறிய நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தை ஈற்றில் உடைய சொற்கள்.

2 (a) உதடு, முருடு மலடு, போன்றவை ட் என்னும் மெய்யின்மே லேறிய உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தை ஈற்றிலுடைய சொற்கள்.

(d) கயிறு, களிறு, வயிறு, போன்றவை, ற் என்னும் மெய்யின்மேலேறிய உயிர்த்தொடர்க் குற்றிய லுகரத்தை ஈற்றில் உடைய சொற்கள்.

இந் நான்குவித குற்றியலுகரங்களுக்குப்பின் உயிர் வருமாயின் அவ்வுகரம் கெடுவதுமல்லாமல், பெரும்பான்மை, ட், ற் என்ற அம்மெய்யெழுத்துக்களும் இரட்டும் :-

1 (a) நாடு + அரசன் = நாட்உ + அரசன் = நாட் + அரசன் = நாட்ட் + அரசன் = நாட்டரசன்.

(b) ஆறு + அலை = ஆற்உ + அலை = ஆற் + அலை = ஆற்ற் + அலை = ஆற்றலை.

2 (a) மலடு + அரிவை = மலட்உ + அரிவை = மலட் + அரிவை = மல்ட்ட் + அரிவை = மலட்டரிவை.

(b) கயிறு + அரவு = கயிற்உ + அரவு = கயிற் + அரவு = கயிற்ற் + அரவு = கயிற்றரவு.

பெரும்பான்மை இவ்விதம் அம்மெய்கள் இரட்டும்; சிலபோது, நாடு + ஆண்டான் = நாடாண்டான்; ஆறு + ஓடியது = ஆறோடியது; உதடு + அசைத்தான் = உதடு அசைத்தான், வயிறு + இல்லை = வயிறில்லை, எனக் குற்றியலுகரங்கள் மாத்திரம் கெடுமேயன்றி, ட் ற் என்ற மெய்கள், நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களுக்கு இடமாயிருந்தபோதிலும், இரட்டுவதில்லை. இவ்விதம் பொதுவாகக் கூறினும் எவ்வெப்போது அம்மெய்கள் இரட்டுகின்றன, எவ்வெப்போது இரட்டுவதில்லை என்பதைஒருவாறு ஊகிக்கலாம். அதனை அடுத்தவாரம் பார்ப்போம்.

---

# யாப்பிலக்கணம்

[858-வது பக்கத் தொடர்ச்சி]

### விருத்தங்கள்

கலாநிலயத்தின் இதழ்களில் வெளிவந்த விருத்த வகைகளைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டுவதாகிய சிறப்புவிஷய மொன்றுண்டு. அஃதாவது, விருத்தங்கள், அடிகளிற் பயின்று வரும் சீர்களின் நோக்கத்தால் பல வித ஒலிவிகற்பம் பெற்று நடக்கும். உதாரணமாக அறுசீ ராசிரிய விருத்தம் ஒன்றே பற்பல இசைகளில் அமைந்து நடத்தலும், ஏனைய விருத்த வகைகளும் அங்ஙனமே ஒலி வேறு பாட்டோடு நடத்தலும் அவ்வவ்வகைகளில் செந்தமிழ்ப்புலவர்களால் பாடப்பட்டுள்ள பல கவிகளை ஆராய்வதால் தெளிவாகும். ஆதலால், இங்கு அவற்றுள் ஒரு சிலவற்றைத் தாலீபுலாக நியாயம்பற்றிப் பார்த்தறிவோம்:

### ஆசிரிய விருத்தம்

1. அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
கருவிளம் தேமா தேமா
அரவெனப் பூதம் ஐந்தும்
கருவிளம் தேமா தேமா
விலங்கிய விகாரப் பாட்டின்
கருவிளம் புளிமா தேமா
வேறுபா டுற்ற வீக்கம்
கூவிளம் தேமா தேமா
கலங்குவ தெவரைக் கண்டால்
கருவிளம் புளிமா தேமா
அவரென்பர் கைவி லேந்தி
கருவிளம் தேமா தேமா
இலங்கையிற் பொருதா ரன்றே
கருவிளம் புளிமா தேமா
மறைகளுக் கிறுதி யாவார்
கருவிளம் புளிமா தேமா.

(இவ்விராம தோத்திரச் செய்யுளில் முதற் சீரும் நான்காஞ் சீரும் விளச்சீர்களும் மற்ற நான்கு சீர்களும் மாச்சீர்களுமாக அடிதோறும் அமைந்திருத்தல் காண்க. மூன்றாமடியிலுள்ள நான்காஞ் சீராகிய 'அவரென்பர்' என்பதை 'புளிமாங்காய்' எனக்கொள்ளுதல் கூடாது; அதில் உள்ள மெல்லின ஒற்றை அழித்து நோக்க அது 'கருவிளம்' ஆவது புலப்படும். மாச்சீரென்பது தேமா புளிமா என்னும் இரண்டையும், விளச்சீர் என்பது 'கூவிளம் கருவிளம்' என்னும் இரண்டையும் குறிக்கும் என்பதை ஞாபகப்படுத்திக்

கொள்க. தேமாவுக்குப் புளிமாவும், புளிமாவுக்குத் தேமாவும் வரலாம். இங்ஙனமே விளச்சீரும் மாறி வரலாம் எனக் கொள்க.)

2\. நிலந்து டித்தன நெடுவரை
புளிமா கூவிளம் கருவிளம்
பொடித்தன நிருதர்தம் குலமாதர்
கருவிளம் கருவிளம் புளிமாங்காய்
பொலந்து டிக்கமை மருங்குல்போல்
புளிமா கூவிளம் கருவிளம்
கண்களும் புருவமும் பொற்றோளும்
கூவிளம் கருவிளம் தேமாங்காய்
வலந்து டித்தன மாதிரந்
புளிமா கூவிளம் கூவிளம்
துடித்தன தடித்தின்றி மதிவானம்
கருவிளம் கருவிளம் புளிமாங்காய்
கலந்தி டித்தன வெடித்தன
புளிமா கூவிளம் கருவிளம்
பூரண மங்கல கலசங்கள்.
கூவிளம் கூவிளம் புளிமாங்காய்

(அனுமான் வைதேகியாரைத் தேடிச் சென்று, இலங்கையை யடைந்து, இராவணன் மாளிகையில் நுழைந்தபோது உண்டான உற்பாதங்களை விளக்கிக் கம்பர் கூறிய இக்கவியில், அடிதோறும் முதற் சீர் மாச்சீராகவும், ஈற்றுச்சீர் காய்ச்சீராகவும், ஏனைய இடைச்சீர் நான்கும் விளச்சீர்களாகவும் அமைந்திருத்தலறிக. முதலடியில் நான்காஞ்சீராகிய 'நிருதர்தம்,' என்பதையும், இரண்டாமடியில் மூன்றாஞ் சீராகிய 'மருங்குல்போல்' என்பதையும், மூன்றாமடியில் ஐந்தாஞ் சீராகிய 'தடித்தின்றி' என்பதையும் நோக்குக. இவை புளிமாங்காய்ச் சீராகத் தோன்றினும், இரண்டாமசையிலுள்ள இடையின மெல்லின ஒற்றுக்களை அழித்து நோக்கக் கருவிளச்சீர்களே யாதல் காண்க. தேமாங்காய்க்குப்புளிமாங்காயும், புளிமாங்காய்க்குத் தேமாங்காயும் மாறி அமைந்து வரலாம். இச்செய்யுளில் அங்ஙனமே அமைந்து வந்துள்ளமை காண்க.)

3\. முத்தங் கொல்லோ முழுநிலவின்
தேமா தேமா கருவிளங்காய்
முறியின் திறனோ முறையமுதச்
புளிமா புளிமா கருவிளங்காய்
சொத்தின் துள்ளி வெள்ளியினம்
தேமா தேமா கூவிளங்காய்
தொடுத்த கொல்லோ துறையறத்தின்
புளிமா தேமா கருவிளங்காய்
வித்து முளைத்த அங்குரங்கொல்
தேமா புளிமா கூவிளங்காய்
வேறே சிலகொல் மெய்ம்முகிழ்த்த
தேமா புளிமா கூவிளங்காய்
தொத்தின் தொகைகொல் யாதென்று
தேமா புளிமா தேமாங்காய்
பல்லுக் குவமை சொல்லுகேன்.
தேமா புளிமா தேமாங்காய்.

(இராமபிரான்றன் பற்களின் சிறப்பை அனுமன் பிராட்டியாருக்குக்கூறியதாக இசையால் திசைபோய கம்பர் இயம்பிய இச்செய்யுளில் அடிதோறும் மூன்றாஞ்சீரும் ஆறாஞ்சீரும் காய்ச்சீர்களாகவும், மற்ற நான்கு சீர்களும் மாச்சீர்களாகவும் அமைந்திருத்தல் காண்க. இதன் ஈற்றடியின் இறுதியி லமைந்துள்ள 'சொல்லுகேன்' என்னுஞ் சீரைக் கூவிளமாகக் கூறலாமெனினும், 'சொல்+லு+கேன்' எனப் பிரிந்திசைத்து நிற்றலால், தேமாங்காய் எனக் கொள்ளுதல் வேண்டும் என்பதே கம்பநாடர் கருத்தென்பதை உணரலாம்.)

4\. விற்பெருந் தடந்தோள் வீர
கூவிளம் புளிமா தேமா
வீங்குநீ ரிலங்கை வெற்பில்
கூவிளம் புளிமா தேமா
நற்பெருந் தவத்த ளாய
கூவிளம் புளிமா தேமா
நங்கையைக் கண்டே னல்லேன்:
கூவிளம் தேமா தேமா
இற்பிறப் பென்ப தொன்றும்
கூவிளம் தேமா தேமா
இரும்பொறை என்ப தொன்றும்
கருவிளம் தேமா தேமா
கற்பெனும் பெயர தொன்றும்
கூவிளம் புளிமா தேமா
களிநடம் புரியக் கண்டேன்.
கருவிளம் புளிமா தேமா.

(அனுமன் இலங்கையில் அசோகவனத்தில் சிஞ்சுபா விருக்கத்தி னடியில் தான் கண்ட காட்சியைப் பொருள்விலக் கணியின்பாற் படுத்திப் புகழ்ந்து கூறியதாகக் கவிகுஞ்சரமாகிய கம்பர் கூறும் இச்செய்யுளில் அடிதோறும் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களாகவும், ஏனைய நான்கு சீர்களும் மாச்சீர்களாயவும் அமைந்திருத்தல் காண்க.)

5\. பொன்செய்தார் முடிகாணேன்
தேமாங்காய் புளிமாங்காய்
அழகொழுகும் திருமுகத்துப்
கருவிளங்காய் கருவிளங்காய
பொலிவு காணேன்
புளிமா தேமா
மின்செய்பூண் அணிகுலவும்
தேமாங்காய் கருவிளங்காய்
புயங்காணேன் அகல்மார்பின்
புளிமாங்காய் புளிமாங்காய்
மேன்மை காணேன்
தேமா தேமா
கொன்செய்பூங் கணைகாணேன்
தேமாங்காய் கூவிளங்காய்
சிலைகாணேன் ஆடல்புரி
புளிமாங்காய் கூவிளங்காய்
கோலம் காணேன்
தேமா தேமா
என்செய்வேன் என்கணவா
தேமாங்காய் கூவிளங்காய்
என்னையொழித் தெவ்விடத்தே
கூவிளங்காய் - கூவிளங்காய்
இருக்கின் றாயே.
புளிமா தேமா.

(திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளின் கண்ணினின்றெழுந்த கடக்கருந்தீயால் உடலெரிந் தொழிந்த மன்மதன் மனைவியாகிய இரதி தேவி புலம்புவதாகக் கந்தபுராண ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியர் பாடிக



இச்செய்யுளில் அடிதோறும் முதல் நான்கு சீர்களும் காய்ச்சீர்களாகவும், கடையிருசீர்களும் மாச்சீர்களாகவும் அமைந்திருத்தல் காண்க. இதில் மூன்றாமடியிலுள்ள நான்காஞ்சீராகிய 'ஆடல்புரி' என்பதைத் 'தேமாங்கனி' எனக்கொள்ளலாமாயினும், மற்றச்சீர்களோடமைய இரண்டாமசையிலுள்ள இடையொற்றை நீக்கிக் 'கூவிளங்காய்' எனவே கொள்ளுதல்வேண்டும்.)

இவ்வாறே மற்ற விருத்தக் கவிகளையும் அலகிட்டு ஓசையூட்டி விகற்பங்களை அறிந்துகொள்ளுக.

முற்றிற்று.

129173

# அப்பர்

## அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[859-வது பக்கத் தொடர்ச்சி]

(4) புகலிவேந்தர் படைப்பும் அவற்றின் யாப்பும்

திருஞானசம்பந்தர் பாடிய முதல்பதிகமாகிய, "தோடுடைய செவியின்" என்னும் பதிகத்தின் சீர்களின் அமைப்பு, அறுசீர்ச் சந்தவிருத்தங்களின்கீழ் விருத்தப்பாவியலாசிரியர் மொழிந்ததைக் கண்டோம். அவ்வாசிரியர் நமது சமயகுரவர் பாடியுள்ள பல சந்த விருத்தங்களுக்கு இலக்கணம் கூறாமல் விட்டுவிட்டார். அவற்றுள் முக்கியமானவை சில சம்பந்தர் தேவாரத்தில் காணலாம்:—எல்லாச் சீர்களும் தேமாவாயிருப்பதுபோல், நேரசை ஒன்றுகூட வாராமல் கருவிளம் அல்லது கருவிளங்கனிச் சீர்களால் பதிக முற்றும் பாடியிருப்பது திருக்கழுமலம்-திருவிராகம் பண் - நட்டபாடை, திருவீழிமிழலை - திருவிராகம் பண்-நட்டபாடை-திருமறைக்காடு-திருவிராகம்-பண் நட்டபாடை என்னும் தலைப்பு அமைந்த பதிகங்களிற் காணலாம்:—

வசையறு மலர்மகள் நிலவிய
மறைவனம் அமர்பர மனைநினை
பசையொடு மிகுகலை பலபயில்
புலவ(ர்)கள் புகழ்வழி வளர்தரு
இசையமர் கழுமல நகரிறை
தமிழ்விர கனதுரை யியல்வல
இசைமலி தமிழொரு பதும்வல
வவருல கினிலெழில் பெறுவரே.

சம்பந்தர்திருமறைக்காடு-திருவிராகம்-பண்நட்டபாடை.

[குறிப்பு—இதில் "புலவர்கள்" புளிமாங்கா யாயினும் இசையில் கருவிளம்போல் ஒலிக்கும். சம்பந்தர் இயற்றமிழை இசைத்தமிழோடு பிணைத்துப் பாடியது அவர்திருவாக்கால் மேற்கண்ட செய்யுளால் அனுமானிக்கலாம்]

திருஞான சம்பந்தர் இசையால் லயப்பட்டுத்தன்னை மறந்து இயற்றமிழிலக்கணத்தை ஒருபோதும் மறந்ததில்லை. சில விடங்களில் அவர் பாடும் விருத்தத்தின் அலகினின்று, யாப்பிலக்கண வாய்பாட்டை * உன்னியே பாடினாரென்பது பின்வரும் செய்யுட்கள் போன்றனவால் விளங்கும்:—

தேமாங்களி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவல்மிசை சிறுநுண்டுளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழி லண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலரே.

சம்பந்தர் - திருவண்ணாமலை - பண் - நட்டபாடை 2.

கடிகொள் கூவிளம் மத்தங் கமழ்சடை
நெடுமுடிக் கணிவர்
பொடிகொள் பூசிய மார்பிற் புனைவர்நன்
மங்கையோர் பங்கர்
கடிகொள் நீடொலி சங்கின் னொலியொடு
கலையொலி துதைந்து
கொடிக ளோங்கிய மாடக் கொச்சைவ
யமமர்ந் தாரே.

திருக்கொச்சைவயம் - பண் - பியந்தைக் காந்தாரம். 4

சந்தக்கலி விருத்தங்களை எடுத்துக் காட்டும்போது முன்னர் 21-வது. வகை யெனக்கூறிய ஆரிய மொழியில் வழங்கும் அதிகரிணீ யென்னும் சந்தவிருத்தமானது மூன்று புளிமாங்கனியும் நான்காவது புளிமாவும் வருமெனக் கண்டோம். சம்பந்தர் தேமாங்கனிச்சீரால் ஆரம்பித்துத் தேமாவால் முடிப்பது தமிழில் இனிமை அதிகமென்று காட்டுவதுபோல் திருவண்ணாமலைப் பதிகமொன்றில் நான்கு செய்யுட்கள் பாடிப் பிறகு அதிகரிணீ இலக்கணத்தில் மற்றச் செய்யுட்கள் பாடினார்.

மேற்கண்ட இரண்டாவது செய்யுளில் 2-வது சீர் கூவிளம். பதிகமுற்றும் ஒவ்வொரு செய்யுளடியின் 2-வது சீர் கூவிளமாகவே காணப்படுகின்றதால் புகலிவேந்தர் 2-வது சீர் கூவிளமா யிருக்கவேண்டும் என்கிற எண்ணம் மனதில் வைத்திருக்கலாமென்பதற்கு இது ஒரு குறியாயிருக்கின்றது. இச்செய்யுள் (சந்தமில்லாத)அறுசீர்க் கழிநெடிலாசிரியவிருத்தத்திலொருவகை. அங்கு ஐந்தாவது வகையில் காட்டிய "ஒன்று மூன்றுட னாறு மாவிளம் பிறவிட முறுமே" என்ற விதிப்படி, 1, 3, 6, ஆகிய சீர்கள் மாச்சீராயும், மற்றவை விளமாயும் வருவது. ஆயினும் 2-ம் சீர் கூவிளத்திலே வருமாயின் அதன் இசை பியந்தைக் காந்தாரப்பண்ணில் அமையுமென்று சம்பந்தர் எண்ணியிருக்கலாம். அப்பண்ணில் அவர் சிருஷ்டித்த விருத்தங்களில் † முக்கியமானவை கோளறு திருப்பதிகம் ஒன்றும் தென் திருமுல்லைவாயல் பதிகம் மற்றொன்றுமாம். முன்னது அப்பர் "சிவனெனுமோசை" போல், எண்சீர்ச் சந்தவிருத்தமாகும். பின்னது எழுசீராய் மணிமால விருத்தமாய் (1, 3, 5 சீர்கள் புளிமாங்காய்ச் சீர்களாயும், 2, 4, 6-ம் சீர்கள் தேமாச் சீர்களாயும் 7-வது புளிமாவாகவும்) வரும்.

* இவ் வுற்சாகமென்னும் சந்த விருத்தத்தில் ஏழாவது சீர் கூவிளச்சீரென்பது யாவரு மறிந்ததன்றோ?—

அடுத்த டுத்த கத்தி யோடு வன்னி கொன்றை கூவிளம்
தொடுத்துடன்சடைப்பெய்தாய்துருத்தி யாயொர்காலனை
கடுத்த டிப்பு றத்தி ஞனி றத்து தைத்த காரணம்
எடுத்தெ டுத்து ரைக்கு மாறு வல்ல மாகின் நல்லமே

—சம்பந்தர்.

† Vide pp. 357-379-Saiva sidhantha Maha samajam edtion of Sambandar Thevaram.

அப்பதிகத்தில் முதல் இரண்டு செய்யுட்களே முதற்சீர் புளிமாங்காய் பெற்று வருகின்றன; ஏனைய செய்யுட்களில் தேமாங்காயும் வரப் பாடியிருக்கிறார். அவ்விசையே நாம் சந்தம் எதிர்பாராத 5-வது வகை ‡ அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தத்தில் அமைந்து மாத்திரையளவால் சந்தம்கொள்வது காண்க.

அறையும் பூம்புன லோடும் ஆடர
 வச்சடை தன்மேற்
பிறையுஞ் சூடுவர் மார்பிற் பெண்ணொரு
 பாகம மர்ந்தார்
மறையின் னொல்லொலி யோவா மந்திர
 வேள்விய றாத
குறைவி லந்தணர் வாழும் கொச்சைவ
 யமமர்ந் தாரே.

சம்பந்தர் - திருக்கொச்சைவயம் - பன்

என்னும் செய்யுளில் ஆறுசீரும் நான்மாத்திரைச் சீர்களாய் நிற்பதால் இது ஒருவகைச் சந்த விருத்தம் அன்றோ? ஆனால் நமதிலக்கியத்தில் சம்பந்தருக்குப் பின், ஆறுஞ் சீரில் ஒரு நெடில் சேர்த்து நமது புலவர்கள் பாடினர் - அதுவே அறுசீர்ச் சந்த விருத்தங்களின் நான்காவது வகையாய "நாலக்கர விளையொடு மாவிறுதியி லொருகாய் நடைபெறுமால்" என்று முன்னர்க் கூறப்பட்டதாகும்.

சம்பந்தர் சிருஷ்டிகளில் மிகவும் புகழ்பெற்றதும் யாவராலும் பாடப்படாததுமான நூதன இசையான யாழ்முரியை முதல் திருமுறையின் இறுதியில் காணலாம். அதன் யாப்பு,

முன்னது கூவிளமே யதன் பின்னது காய்தனை
 யடை யது தனி நிரை நடுவினி பொருந்தி
அன்னவை தம்பிறகே விரு சீர்களுங் கூவிளம்
 கரு விளம் பகுத்தென விரண்டிரண் டெனவே
சொன்னவை நாலசையா மவை சீருட னேவரச்
 சொலும் கடை முடியவை யொருவிளம் புளிமா
இன்னது யாழ்முரிப்பண் ணென ஞானசம் பந்தன்ப
 கரும் தனி நடையுடை கவியெனப் பகரே

என விருத்தப்பாவியல் ஆசிரியர் நடையில் உதாரணமான விதியும் கூறலாம். இது இசையிலும் நூதன இசை. ¶ இயற்றமிழிலும் நூதனயாப்பு. ஆளுடைய பிள்ளையார் பாடிய சந்தர்ப்பமும் கருத்தும் பெரிய புராணத்தில் காண்க. இப்பதிகத்தில் "தருமபுரம் பதியே" என்னும் சொற்றொடரில் தருமபுரம் என்பது "த(ர்)மபுரம்" என்பதுபோல் கருவிளத்தின் அளவிசையே கொடுக்கும். திருக்கடைக் காப்புச் செய்யுளில் (அதாவது இப்பதிகத்தின் 11-வது செய்யுளில்) 2-வது அடியில் "தருமபுரம் பதியை" என்பது ஒரு விளம் புளிமா நிற்குமிடத்தில் வைத்துப் பாடியிருப்பது காண்க.

காழியர்கோன் பாடிய சந்தவிருத்தங்களில் உள்ளங் கவரும் மற்றொரு சந்தவிருத்தப் பதிக முண்டு. அது திருக்கழுமலம் திருத்தாளச்சதி பண் வியாழக்குறிஞ்சியாகும். அப்பதிகத்தின் முதற்செய்யுளை அலகிட்டுக் காண்போம்:—

பந்தத்தால் வந்தெப்பால் பயின்று நின்ற வும்பரப்
 பாலேசேர் வாயேனோன் பயில்கணமுனிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின் மங்கை தன்னொடுஞ்
 சேர்வார் நாணாள் நீள்கயிலைத் திகழ்தரு பரிசதெ
சந்தித்தே யிந்தப்பார் சனங்கணின்று தங்கணால்
 தாமே காணா வாழ்வாரத் தகவுசெய் தவனதிடங்
கந்தத்தா லெண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக்
 காடார் பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே

இது "தேமாங்காய் தேமாங்காய் புளிமா தேமா கூவிளம்" முதலடியின் பாதி 2-வது பாதி தேமா தேமாங்காய் கருவிளம் கருவிளங்காய் ஆகிய இருவகைச் சந்தக் கலிநிலைத்துறைகளின் இணைப்பான பத்துச்சீரையுடைய சந்தவிருத்தமாம். இங்கும் இசையை முக்கியமாய்க்கவனித்து அலகிட வேண்டுமன்றி, எழுத்துக்களின் உருவத்தைக் கணக்கில் கொள்ளலாகாது. நீள்கயிலை யென்பதை "நீள்கைலை" போல் தேமாங்காயாய்க் கொள்ளவேண்டும். ஏனெனில்புகலிவேந்தர் தமது இசையினுள், இயற்றமிழ் யாப்பை அமைத்துப் பாடினாராதலின், அதன் அடிப்படை இசையென்று எண்ணாமல், இயற்றமிழ் இலக்கணமொன்றையே கைக்கொண்டு நாம் அலகிட முயல்வோமாயின், அவர் யாப்புச் சில விடங்களில் முரண்படக் காணப்படுவது சாதாரணமேயாம். ஆதலால் மேற்கூறிய அலகு இசையிற் பொருந்துமென்பது காண்க. ஆயினும் சம்பந்தர் சந்தங்களை இன்னும் செவ்வனே கண்டறிந்தவரில்லை. ஆகையால் அவர் தேவாரம் இயற்றமிழில் ஆராய்ச்சிக்கு எவ்வளவு இடங்கொடுக்கின்றதோ அத்துணையிடம் இசைத்தமிழிலும் கொடுக்கிறதன்றி, அவர் பதிகம் ஒவ்வொன்றும் நடித்துக் காட்டக்கூடிய வடிவங்களாய் "ஆடு" தலுக்கு ஒத்த பாடலாகவே யிருக்கின்றது.

‡ ஒன்று மூன்றுட னாறு
 மாவிளம் பிறவிட முறமே—விருத்தப் பாவியல்

¶ திருஞான சம்பந்தர் இசையில் திருவிராகமென்பது நூதன இசையென்னலாம். "திருவிருத்தம்," "திருச்சந்தவிருத்தம்" என்னும் சொற்றொடர்களில் "திரு" என்னும் அடைமொழியாது உணர்த்துகின்றதோ, அதையே திருவிராக மென்பதற்கும் கொள்ளலாமா வென்பதை அறிஞர் ஆராய்க.


# ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

**செந்தமிழ்க்காதை.**

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0




# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

6-ம் பத்து, 2-ம் தசகம்

[866-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பாசுரம்

குழகி யெங்கள் குழமணன் கொண்டு
 கோயின்மை செய்து கன்மமொன் றில்லை
பழகியா மிருப்போம்
 பரமேயித் திருவருள்கள்
அழகியா ரிவ்வுலக மூன்றுக்குந்
 தேவிமைத் தகுவார் பலருளர்
கழக மேறே னம்பீ யுனக்கு
 மிளைதே கன்மமே.

இப்பிராட்டி, தனக்கும் தன் தோழிமார்களுக்கும் தங்கள் ஸாதனங்களுக்குமாக அமைத்துக்கொண்ட கழகத்தில், இவளது கோபம் சற்றுச் தலைசாய்ந்து ஹாஸியவார்த்தைகள் பேசவே கிருஷ்ணன் அதைக் கைப்பிடித்துக் கழகத்தில் பிரவேசிக்கத்துடங்கி அதிலுள்ள குழமணனை (மண்ணால் செய்த வர்ணப்பாவை—பாலியப் பெண்கள்வைத்து விளையாடும்பிள்ளை)எடுக்க யத்திநிக்கின்றான். இப்பிராட்டி, உனக்குக்கூடப் பாலியப் பெண்கள் கூடும் ஆட்டக்கழகத்தில் புகுந்து விளையாடுதல் இழிவாகுமென்று தடுக்கவே, உள்ளும் போகவல்லனாகாதே வெளியில் நின்று தரிக்கவும் ஆற்றானாய்த் திகைக்கிறான். கிளிகளும் பூவைகளும் கைவிடவே பறந்து கழகத்துப்போ யேறிவிட்டன. இப்பிராட்டி, தன் கைக்கருகாமையில் உள்ளே கிடந்த தன் குழமணனைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டாளாகையால் கண்ணனுக்குக் கழகமேறி அதையெடுக்க ஏலாதுபோயிற்று.

முதலடிக்கு உரை:—குழகி - எங்களோடு உறவாடுவதற்காகச் சிற்சில விளையாட்டுக் கிருத்திரமங்களைச் செய்து, எங்கள் குழமணன் - எங்கள் பாவையை, கொண்டு - கையில் எடுத்துக்கொண்டு, (இன்னம் எடுக்கவில்லை, எடுத்துவிட்டால்தான் என்ன பெரும்பேறு எய்துவாய்)கோயின்மை செய்து - நீ மேன்மையாயிருப்பதைப் பிறரறியக் காட்டி, கன்மம்-நீ செய்யும் காரியம், (அதாவது இவ்விடத்தில் அதனின் பிரயோஜநம்) ஒன்றில்லை - இழிவேயன்றி மற்று யாதொன்றும் கிடையாது.

I கோயின்மை என்ற பதமே,மலையாள ராஜ்ஜியங்களில் தேவஸ்வங்களுக்கும் மடங்களுக்கும் இன்னமுள்ள தர்மசாலைகளுக்கும் மேல்விசாரணைக் கர்த்தாவாக விருக்கை என்கின்ற அர்த்தத்தில்"மேல்கோயிமா" பாத்தியமென்று நாளைக்கும் நடப்பில் இருக்கின்றது. கொச்சி ராஜ்ஜியத்தில் பிரவித்தமான இருஞானக்கொடை என்ற வலிய தேவாலயத்திற்கு விசாரணைக்கர்த்தா "நான்" "நீ" என்று திருவாங்கூர் சமஸ்தானத்திற்கும் கொச்சி சமஸ்தானத்திற்கும் விவாத மேற்பட்டபோது, ஆழ்வாரின் இப்பாசுரத்தில் "கோயின்மை" என்று இப்பாத்யதையைக் கூறியிருப்பதாகத் திருவாங்கூரார்மூலசாசன மொன்றின் உதவியால் தங்கள் கட்சியை வென்றார்கள்.

II காரியம் - கன்மம்—ஒருவன் செய்யும் உத்தியோகத்துக்குப் பிரதிபதமாக மைசூரில் வழங்குவது அறியத்தக்கது. உத்தியோகம் ஒன்றும் நிலையில்லாதவனை, "காரியமில்லாதவன்" என்பார்கள்.

III 'குழமணன்' எடுத்துக்கொண்டு பெருந்தகைமை யேறியதாக ஜயகோஷம் வேண்டா வென்றது. அபலைகளான இடைப்பெண்களைக் கிருஷ்ணன் ஜெயித்தானென்றால் உனக்கு அது பெருமையாகுமோ? Fancy your lording it over us by force or subterfuge! இரண்டாமடி:—இது முன்னடியோடும் பின்மூன்று நான்குஅடிகளோடும்சேர்ந்து அநுவயிக்கவில்லைபோல்தோற்றுகிறது. "பழகி இருப்போ" மென்பதால் "கண்ணன் சில வார்த்தைகள் சொன்னான்; அது பொய்களென்று எங்களுக்குத் தெரியும்" என்று சொல்வதாய் ஆறாயிரப்படி உரைகாரர் பின்வருமாறு ஊகிக்கிறார். இதுவே பொருத்தமென்பதற்கு அத்தாக்ஷியாக,மூவுலகுக்கும் தேவனாகிய கண்ணனுக்கு ஈடான பெண்கள் பலர் இருக்கிறார்களென்று கூறுவதால் தாங்கள் கண்ணன் தற்காலம்காட்டுகின்ற விநயத்திற்கும் அவனது பணிவுக்கும் பணிமொழிக்கும் அநர்ஹரென்றுசொல்வது ஷியார் உரைதவிரச் சந்தர்ப்பத்துக்கு வேறு பொருள்கூற இடமில்லை. ஆகையால் அதையே எடுத்து எழுதுவோம்.

"முற்பட விவளை யணுகக் கூசியிருந்த வெம்பெருமான் இப்படிவிவள் தன்னைக் குறித்துச்சில வார்த்தைகளைச் சொன்னவாறே அதுவே பற்றுக்கோடு என்று பயமற்றவனாய்ச்சென்றணுகிஇவளோடேயிருந்தகுழமணனை யெடுக்க, குழகியெங்கள் குழமணனைக் கைக்கொண்டுஎங்களைத் தாழ்வுபடுத்துவதில் உனக்குஎன்ன (ஏற்றம் = வெற்றி) பிரயோஜநமுண்டென்று இவள் சொல்ல நான் உயிரோடுஉய்ப்பான்பொருட்டுஎடுத்தேனென்று அவனருளிச்செய்ய நாங்கள் இந்தப்பொய்க்குப் பழகியோ மல்லோமோ? நிர்வதிகமானவிசேஷப் பாராட்டு நீஎங்களுக்குக் காண்பிக்கிறாய்,அதற்கு நாங்கள் விஷயமாகப் பெறுவோமோ என்று இவள் சொல்ல, நீயல்லது மற்றென்னுடைய அத்தியந்த பிரீதிக்கு விஷயமுண்டோ? என்று அவன் அருளிச்செய்ய,மூன்று லோகங்களிலும் அழகினால் ஈடாகப் பெண்கள் எத்தனைபே ருளர்; நீ அவர்களைத் தேவிமாராக ஆக்கிக்கொள், அது நிற்க நீ முந்துற எங்கள் கழகத்திலேறாதேகொள். (திருவுள்ளம்பற்று) இது எனக்கும் இழிவான காரியம் - என்கிறாள்.

விசேஷக் குறிப்பு:—ஸர்வேசுவரனாயிருப்பான் ஸ்ரீ கிருஷ்ணன் ஒரு இடப்பெண் இடும் 'எங்கள் வாயிற்படியைத் தாண்டி உள்ளே போகாதேகொள்" என்ற உத்திரவைச் சிரமேற்கொண்டு இராஜ ஆஞ்ஞையால் விலங்கிடப் பட்டவன்போல் சக்தியற்றுத் தடுமாறி நின்ற ஸௌலப்பியத்தை யான் அநுபவிக்க வியாஸாதி மஹரிஷிகள் எழுதிவைத்தார்களோ! வென்று மனமுருகி இப்பாசுரத்திற்குப் பட்டர் என்ற ஆசான் பொருள் கூறி (பகவான் ஸௌலப்பியத்தை) அவன் பக்தர்களுக்குத் தாழ்ந்து பணிவதை வற்புறுத்துவாராம்.

பதக்குறிப்புக்கள்:-I கண்ணன் நான்கு பெண்களுக்கு நடுவே தீம்புசெய்ய வந்தானென்பது "இளைது" அதாவது உன் கௌரவத்துக்குக் குறைவு அல்லவோ.

II ஆறாயிரப்படி உரையில் "அடிக்கழிவு செய்தால் உனக்கு என்ன பிரயோசனம்" என்பதை "எங்களைத்

தாழ்வுபடுத்துவதால் உனக்கு என்ன (ஏற்றம்-வெற்றி) பிரயோஜநம்" என்று நாம் மொழிபெயர்த்திருக்கிறோம். "அடிக்கழிவு" என்ற தொடருக்கு ஆரியத்தில் "மூலதோஹானி". அதாவது "வேரோடு மாய்ந்து போதல்" என்பார். நாட்டு வழக்கத்தில் "அடிமாண்டு போதல்" என்ற வசைவார்த்தையில் இது அடங்கும். இக்கடுமையான பிரயோகம் இப்பிராட்டி மனோ நிச்சயத்தைக் கண்ணன் பலாத்காரமாயோ விளையாட்டுக் காட்டியோ அழிக்க முயற்சிசெய்கின்றானென்ற கோபத்தால் வந்த பேச்சு. குழகி - "நன்றாக அந்வியிக்காமல் பேசி," இது விளையாட்டினால் எழுத்துக்கள் ஸரியாய்ப்பலிக்காமலே, அவற்றின் உச்சரிப்பு ஒருவாறு பிறழ்ந்துகேட்பதைக் கூறுகின்றாள். தழதழத்தவார்த்தையால்நட்புப்பாஷையில் "கொட்டிக் குளறுகிறாள்" என்பார்கள்.

இதற்கு "மழறு தேன்மொழியாள்" எதிரொலி "Echo". கண்ணன் "அருள் சூடும் மடவார்" அவனுக்கு ஸம்பாஷணையில் உருசியோடு அனுபவிக்கத் தேனைச் சுவரசமாக (கசக்கிப் பிழிந்தெடுப்பவரில்லாமல் பூமியில் சொட்டவிடும் தேனடைபோல்) அநுபவிக்கமேன்மேல் ரஸமாய்ப்பொழிபவர்கள். இதற்குப் பதில் மறுமொழி கண்ணன் குழகுவான்; ஆநந்தத்தால்தட்டித் தடுமாறிமதுபானம்பண்ணினவன்போல் எதிர்மொழி கொடுப்பானென்று இப் பிராட்டி பரிஹாஸ வார்த்தை சொல்வது. குழகல் அவர்களோடு அல்லவோ யுக்தமும் பொருத்தமும் தக்கதும்—எங்களுக்கு நீ ஏன் குழகவேண்டுமென்று இன்னமும் கண்ணனுக்குப் பிரமை தீரவில்லையென்று இடித்துக் கூறின்படி.

III. எம் சிற்றறிவுக்குத் தோன்றியது மற்றொரு சங்கதி கூறஉளது-கண்ணன் அங்கிருந்த குழமணனை எடுக்க எத்தனித்தானே யல்லது கையில் எடுக்கவில்லையென்றும், இப்பிராட்டியே அதைக்கைக்கொண்டாள் என்றும் கூறினோம். எனினும் ஆறாயிரப்படி உரையோ அவன் அப்பாவையைக் கைப்பற்றினானென்று அறிவிக்கின்றது. இவ்வுரையின் கருத்துப்போல் அவனிடத்து இருந்ததாயின் அடுத்த பாசுரத்தில், அவன் கோபி பிராட்டியின் கையிலிருந்து அப்பாவையைப் பறிப்பது" என்று உணர்த்துவது எப்படி ஒவ்வும். இரண்டு குழமணன் இருந்திருந்தா லல்லது பொருந்தாது. பெரியார் வாக்குப் பொய்க்காது; யாம் தவறி இருந்திருப்போமென்று விநயபூர்வமாய் அறிவித்துக் கொள்கிறோம். பெரியார் சாஸனமே எடுக்கத் தக்கது.

---

7-ம் பாசுரம்.

கன்மமன் றெங்கள் கையிற் பாவை
பறிப்பது கடல்ஞால முண்டிட்ட
நின்மலா நெடியாயுனக்
கேலும் பிழையே
வன்மமே சொல்லி யெம்மைநீ
விளையாடுதி யதுகேட்கி லென்னைமார்
தன்மபாவ மென்னா
ரொருநான்று தடிபிணக்கே.

கிருஷ்ணன் கழகத்தில் ஸஹிகள் மத்தியில் ஒரு இடைவழி உண்டாக்கிக்கொண்டு அகத்துப் புகுந்து இப்பிராட்டியின் கையிலுள்ள பாவையைப் பறிக்கிறான்.

உரை:—பிராட்டி சொல்வது—எங்கள் கையில் பாவையைப்பறிப்பது - என் கையிலிருந்து பாவையைப் பிடுங்கிக்கொள்வது, கன்மமன்று-(நீ செய்யக் கூடிய) காரியமன்று - உனக்குக் குறைவாகும் - என் கைகளைப்பிடித்து உன்னுடையகைகளால் அவைகளிலடக்கமான பாவையைப் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டாய்-வாழ்க்கைப்படாத பெண்களின் மெய்யைத் தீண்டுவது தகுதியோ? கிருஷ்ணன் சொல்வது-"யான் ஜகத்தை, கடல்பூமி அடங்கப் பிரளயகாலத்தில் என் வயிற்றில் வைத்து ரக்ஷித்தவனல்லவோ? எல்லா லோகங்களிலும் நான் பரோபகாரி என்னும் யசஸு பரவியிருப்பதை நீ கேட்டிலையோ? யான் மாசற்ற நற்குணங்களையே சுபாவமாக உடையவன் அல்லனோ? யான் தீண்டுவது யாருக்கும் பாவனமல்லவோ? பிராட்டி—நீ சொல்வதெல்லாம் சரியே, ஆயினும் இப்பேர்பட்ட உனக்குங்கூடப் பெண்களை ஹிம்ஸித்தால் பிழையே யாகுமென்று உலகத்தார் சொல்வார்கள். உலகத்தில் உன் திறம் அறிந்தவர்கள் சிற்சிலரே உளர். இவர்கள் நாக்கள்மடங்கும்படி, மற்றையவர்கள்உன்னை, பெண்களுக்கு வீண்வம்புகள் விளைத்தவன் விளைக்கிறவன் இனியுமேலும் விளைப்போன்என்று தூஷிப்பார்கள். வன்மையே சொல்லி - வன்மை - கடுஞ்சொல், அப்பிரியமான வார்த்தை - கிருஷ்ணன் பனிமொழியாகத் தாழ்ந்து, நீயும் நானு மிப்படியல்லவோ முன்பே ஆடிக் கலந்தோம் என்று ஞாபகம் மூட்ட, இப்படி யெல்லாம் சொல்லி நீ விளையாடுதி - நீ இல்லாததையும் பொல்லாததையும் பேசி விளையாடுகிறாய்.—[அவன் மெய்யாக ஒரு மர்மம் - அந்தரங்கத்தில் நடந்த ஒரு ஸம்பவம் - சொல்ல இதினைச் சாதுரியமாய் அவள் விளையாட்டாக்குகிறாள்." இருபத்து நாலாயிரப்படி] அது - அந்த விளையாட்டை, என்னைமார் - நான் வாழக்கைப்படுவதற் கேற்படுத்தி யிருக்கிற புருஷனுக்குஸஹோதரிகள் (இப்பெண் தன்விவாஹத்துக்குப் பரியம் - முன் நிச்சயமான - அதாவது - திருடமான திருமணப்பேச்சு - ஏற்பட்டிருப்பதாகக் கூறுகிறாள்.) தன்மம் பாவம் என்னார் - இது செய்தலால் தர்மம் மற்றது செய்தால் அதர்மம்-நியாயமில்லாதது என்ற பகுத்தறிவு பாராட்டி நிதானிக்க மாட்டுவார்கள் அல்லர் - அதாவது உனக்கு அக்கிரமமாய்க் கூடத் தீங்கு இயற்றுவார்களென்று ஊஹித்துப் பேசுகின்றாள் - ஒரு நான்று-நீ சொல்லும் நாத்திமார்கள் இங்கு இல்லையே? அதுபற்றி என்ன வீண்பேச்சு என்று கேட்பாய் - ஏதானும் ஒரு காலத்தில் அவர்கள் காதுக்கு இவ்விளையாட்டில் சொல்லும் பேச்சு எட்டும், அந்த நாளில் தடிபிணக்கே - முரட்டுத்தனமான விரோதம் உண்டாகும், உன்னை அவமதித்து வெகு அலக்ஷியம் செய்வார்களென்று கருத்து. யாதானும் சமாதானம் சொன்னாலும் அதை அவதானத்துடன் கேட்டுத் தெளிந்துகொள்ள மாட்டார்கள். பெண்கள் தடிகளால் கலகஞ்செய்ய ஏலாதவர்கள் - விவேகத்தால் ஆராய்ந்தறியாத மூர்க்கத்தன மென்று அர்த்தங்கொள்வது சமயோசிதம்.

விசேஷக் குறிப்பு:—இப்பிராட்டிச் சிறுமி தனக்கு 'என்னைமார்"—நாத்தனார்களிருப்பதாக நினைவுபடுத்துவது புரட்டு-இது கிருஷ்ணன் முன்னிலையில் யதார்த்தம் (யதா - இதுதான், அர்த்தம் - பொருள், அதாவது நடந்தேறிய காரியம்) என்றுரைத்தாலும் சோதித்



தால் உண்மையோடு இவ்வண்ணம் உரைப்பது ஒவ்வாததாகி முடியும் தன்மைத்து. ஆனாலும் பொய்யே Falsehood ஸத்தியத்தைக் கடைபிடிப்பவரும் பொய்தானென்று சொல்லத் துணிய மாட்டுவார்களோ. பொய்யினுள் மெய்யென்று ஓர் அம்சம் உளதோவென்றால் அதை இங்கு விஸ்தரிப்போம். ஆங்கிலேயத்தில் இச் சந்தர்ப்பத்தை "Terminological inexactitude என்று மரியாதைப்படுத்தி விவகரிப்பார்கள்.

இப்படிச்கூட ஸம்பாவிதமோ இப்படிக்கும் உண்டோ வென்றால் இக்கதையின் அம்சங்கள் சிற்சிலவற்றை ஆராய்வோம்.

இப்பிராட்டி வெகு ஸாமர்த்தியமாய்ப் பேசுவாளாயினும் வெகு இளம்பிராயமுள்ளவள், அநுபவ மில்லாதவள் பயிற்சியும் முதிர்ச்சியு மிவளுக் கேது? இப்படியாயின் இடைவெட்டு ப்பேச்சுக்கள் புறப்படக்கூடுமோவென்றகேட்டால் அம்மாதிரிப்பேச்சு பெண்மைக்கே உரித்தென்று யாந் துணிந்துரைக்க வல்லேமல்லமாயினும் ஊடலின்கண்ணே சாத்வீகப் பிருகிருதியுள்ள பெண்ணுக்கும் சக்களத்தி சாத்துருவத்தால் (மாற்றாண்மை பற்றித் தூண்டப்பட நேரிட்டாலென்றும் பொறாமையும் தனக் கேதேனும் தீங்கு வருமோவென்ற அச்சமும் இல்லாதவற்றை மெய்போல்கற்பிக்க மனம் ஸம்மதிக்குமென்றும்-மனதின் நாட்டம் கனவாகவிருப்பதை ஒருகணத்தில்நனவாக விசுவாஸம்செய்து மெய்யல்லவென்று உணராமலே மேல்கண்ட நோக்கத்தி லூன்றியதை வளர்த்துத் திருடப்படுத்துவது அஸம்பாவிதமல்லவென்றும் அறிய வேண்டும். மனதில் திட்டப்படுத்திய ஒன்று கடைப்பிடித்து நிற்குமேயன்றிக் கலையாது - வேண்டுமென்ற வெண்ணம் சங்கையால் கலைக்க வொண்ணாத தல்லவோ? இது காரணம்பற்றிப் பொய் மெய்யாக உரைக்க இச் சந்தர்பம் இடந்தரு மல்லவோ? மேலும் வேறு சில ஆராயத்தக்கன உள. முதலில் இவளுக்கு விவாகமாயிருந்தால் நாத்திமார் தூஷணைக்குப் பயப்படுகிறவள் துணிந்து கண்ணனோடு கலவிகூடக்கூடப் பூர்வத்தில் செய்திருக்கக் கூடுமோ? யாம் உரையியற்றியதுபோல் முன் திருமணப்பேச்சு உலாவியிருந்தால் இவள் சொல்வதுபோல் இவள் ஏற்படுத்திய என்னைமார்கள் கண்ணனைப் பொடிந்து தனக்கு அவதூறு ஏற்றுவார்களாயிருக்கலாம். இதுவும் உள்பொருளைக் கவனித்தால் ஏலாததாகும். இப்படிக்கு எண்ணிப் பேசியதாயிருந்தால் இது கண்ணனை அடிக்கடி கலவிக்கு வரும்படி தூண்டற்கு உபாயஸாதநமாய் ஏற்படுத்தி வாய்விட்ட மொழிகளாகலாம். அவனை இவ்விதக் கேள்விகளெல்லாம் அச்சமுறச் செய்துஇவளையே தான் மணந்துகொள்ள அச்சுறுத்தலாம் என்ற மற்றொரு அவலம்பத்தாலும் இந்தப் பிரகடநத்தைக் கிளப்ப விடமுண்டு - தவிரவும், கண்ணனைத் தடுக்க வேறே சாக்குப்போக் கில்லாமையால், மெய்தொட்டு கலவாதே, ஊரில் அலர் உண்டாகுமென்று சொன்னால்அது இச்சமயத்திற்குத் தக்கதோர் உபாயமென்று இப்பிராட்டி நினைத்தவளாய்ப் பேசியிருக்கலாம். இவள் கனவிலும் கண்ணனை விட்டு உயிர் தரித்திருக்க ஸம்மதிப்பவளோ? இவள் பொய்யே சொல்கிறாளென்று ஸாமான்னியர்கள் சொன்னால் அவர் மிகையா யுரைப்பவர்களென்று செப்பவொண்ணாது. இது ஒரு பக்கம். இரண்டொரு நாள் கண்ணன் கலவியில்லா திருப்பத்தன் உயிரைக்காப்பாற்றிக்கொள்ள வகைதெரிவு இல்லாமல்மனங்கலங்கிப்பதறும் ஏழை எப்படி பிறபுருஷனுக்கு வாழ்க்கைப்பட ஸம்மதி தருவாள். ஆகையினால் முதலில் எடுத்துரைத்தபடி யாம் இந்த உரையியற்றிய ஊஹமும் மெய்த்தோல் போர்த்தி உலாவும் பொய்யே. இந்தச்சந்தர்ப்பத்தை "அத்தியந்தம் பொய்" என்ற பதத்தால் விவஹரிப்பது கொடுமையேயாகும். ஆங்கிலேயத்தில் இதற்குத் தகுந்த மற்றொரு பதம் சந்தர்ப்ப அனுகுணமாய் உபயோகிப்பார்கள். அதற்கு "fib" என்று கூற்று. மற்றொரு உன்னிப்பும் இதிலடங்கியிருக்கிறது. இப்பிராட்டி கண்ணன் வரவை எதிர்பார்த்து ஒவ்வொரு பொழுதாய் அவன் அருள் கிடைக்காமல் போகவே இவள் அந்தரங்கத்தில் இவனது உறவில்லாமலே யாம் முழுகிப்போவோமோ வென்ற திகில் குடிகொண்டதினால் அவனது மனோ இந்திரியத்தின் நினைநரம்புகள் (nerves)சூடுபட்டுக் கிலேசம் பயம் இவைகளை உண்டாக்கி இவள் புத்தியே இவள் வசமில்லாமல் போக்கிவிட்டதோ? இந்துதேச வைத்தியர்கள் இந்நிலையைச்சீதளஜந்நியென்றும் கைபார்த்து வியாதி நிர்ணயஞ் செய்பவர்கள் பூதநாடித் துடிப்பென்றும் ஏனைய வைத்திய நூல்களில் Hysterics என்றும் உரைப்பார்கள். இது தாக்கும்போது நாசியில் ஏதோ புதுமணம் வருகின்றதென்றும் - 'கண்'கள் ஏனையவருக்குத் தோற்றாத உருவங்களைப் பார்ப்பதாயும், மெய்யாரோ தன்னைத் தாக்குவதாயும் சிறு பெண்கள்நலிவு படுதல் சம்பாவிதம் - இப் "புலியில்லாத கிலி" தான் இவளைப் பிடித்துக்கொண்டதோ? மற்றொரு சங்கதி இவ்வாராய்ச்சியின்கண் தோன்றுவதை எடுத்துப் பேசுவது உசிதம். இப்பிராட்டி மெய்யென்று மனந்துணிந்து வார்த்தையை வாய்விட்டாளாயினும் அவளுக்கு உள் அந்தரங்கத்தில் சுவயமதியால், கல்பிதமென்று தெரியுமல்லவோ? கண்ணபிரான் இவளின் பிரகடனம் காற்றுவாட்டத்தில் கற்பித்தவார்த்தை என்றதை அறியக்கூடியவ னல்லனோ? இப்படி இருதலையிலும் பொய் யென்ற உணர்ச்சி இருக்கப் பொய்யையே இப்பிராட்டி பெய்தாள் என்று சொல்லவும் வேண்டுமோ?

தத்துவத்தில், நாயகன் நாயகி மத்தியத்தில் பொய் கலவாமல்மெய்யையேஇருவரும்முழுவதும்நடாத்துவார்கள்என்று நினைப்பவன் மௌட்டியனாய்த்தீருவான். ஒருவருக்கும் கேடுவிளைக்க வல்லதல்லாததுபொய் அல்லாமல் மெய்யாய்த் தான் உலாவட்டுமே?

சுவாபதேசம்-எம்பெருமான் வரவைக்கோலி அவனின் கலவியில் உள்ள ஆசை மிகுதியால் தூதுவிட்டும் அவன் வாரானாய் நிற்கக்கோபாவேசங்கொண்டு அவனே வந்தாலும் கலப்போ மல்லோம், என்று திருடஸங்கல்பம் செய்திருந்தாலும் அவன், என் கலப்பு உமக்கு ஒருநாளும் விடத்தகாததல்லவோ; யாம், நீர் அகப்பட எல்லாப் பிராணிகளுக்கும் தடுக்க வொண்ணாத நற்றுணை யல்லவோ என்று அவர் புத்தியில் ஞாபகம் வருத்த இப்பாசுரத்தில் தாம் வஸ்து தத்துவத்தை மறந்து அவனைக் கோபித்தோமென்று தீர்மானிக்கிறார். லோகங்களில் எல்லாரையும்ஒருவரும் அபேக்ஷிக்காதிருக்கப் பிரளயங்களிலுங் கூடக் காப்பாற்றி அவர்களை உஜ்ஜீவிப்பித்து நல்வழிக்குக் கிரமக்கிரமமாய் உய்த்துப்புருஷார்த்தங்களைக்கொடுப்பவன் யாமல்லவோவென்று ஆழ்வாருக்குத் தம் திடமான நியதியைப் பகவான் சொல்லிக்காட்டஞானந்தெளிந்தாரென்று ஸங்கதி தெரிய வருகிறது.

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்— 10. கவந்தப் படலம்.

[857-வது பக்கத் தொடர்ச்சி]

விண்ணவ ரிரங்க விறக்கவோ விரைந்தனர்.

தற்கோலே எண்ணமே தலைக்கேறி இருக்கின்ற தன தண்ணனைப்பார்த்தான் இலக்குவன்; அன்னவனைத் தேற்றப்புகுவது தன்கடமையென நினைத்தனன். எனினும், இராமனைப் பற்றியிருந்த அந்நோய் தொட்டாரை யொட்டியாய்ப் பரவி இலக்குவனையும் பற்றிக் கொண்டது. அன்றியும், வடமொழிநூலில் தானே கவந்தன் வாயினுள் சென்று சாகவிரைந்த செய்தியை எளிதில் மறக்கமாட்டாதவனும் ஆயினன்போலும். ஆதலின், இலக்குவனுக்கு இங்கு வீரம் பிறக்க மிக்க நேரமாகின்றது; அது பிறக்கும் முன்னர், "இராமா, நீ உயிர்துறக்க வேண்டா" என்று இவன் உரைப்பதெல்லாம் தானும் உயிர்துறத்தலே தக்கதென்னும் நினைவையே உள்ளடக்கியிருக்கக் காணலாம்—

ஆண்டா னின்னன பன்னிட வையற் கிளவீரன்
ஈண்டி யானுன் பின்னே கியபின் னிவ்விடர்வந்து
மூண்டான் முன்னே யாருயி ரோடு முடியாதே
மீண்டேபோதற்காமெனினன்றென்வினையென்றான்

[ஆண்டவனாகிய இராமன் இவைகளைச் சொல்ல, அப்பெருமகனுக்குத் தம்பியாகிய இலக்ஷ்மணன், நெருங்கி நான் உன் பின்னே வந்தபிறகு இந்தத் துன்பம் மூண்டதென்றால், உனக்குமுன் நான் சாகாமல், அருமையான உயிருடன் திரும்பிச் செல்லக்கூடுமாயின், என் காரியம் மிக அழகிது - என்றான்]

என்றா னென்னுப் பின்னு மிசைப்பா னிடர்தன்னை
வென்றா ரன்றே வீரர்க ளாவார் விரவாரின்
தன்றாய் தந்தை தம்மு னெனுந்தன் மையர்முன்னே
பொன்றா னென்றா னீங்குவ தன்றோ புகழம்மா

[என்று கூறினவனாகிய இலக்குவன் அவ்வாறு கூறிப் பின்னும் கூறுவான்-வந்த இடுக்கண்களை வென்றவர்கள் அல்லரோ வீரர்கள் ஆவார். பகைவரைப்போல, தன்தாய் தந்தை தமையன் என்னும் இவர்களுக்கு ஆபத்து நேர்ந்தால் அவர்களுக்கு முன்னே தான் சாகவில்லை என்ற சொல் பேசப்படுமாயின், புகழானது அவனைவிட்டு நீங்கி விடுமல்லவா]

வீரம் பேசவந்தவன் தன் புகழிற்குப் பரியப் புகுகின்றான். வாய்நின்று வீரம் வருகின்றதெனினும் தன் சாவே தலையில் நின்று குடைகின்றது. தனக்கு நேரும் பழியையும் பரிபவத்தையுமே அஞ்சிக் கூசுவானாகி, இராமனது உயிரிற்கு இரங்குகின்றது இவன் மனம்—

மானே யன்னா டன்னொடு தம்முன் வரையாருங்
கானே வைகக் கண்டுயில் கொள்ளா தயல்காத்தற்
கானா னென்னே யென்றவர் முன்னே யவரின்றித்
தானே வந்தா னென்றலின் வேறோர் தவறுண்டோ

[மான்போன்ற சீதையோடு தன் தமையன் மலைகள் நிறைந்த காட்டில் வசிக்க அவன் தம்பி இருபோதும் தூங்காமல் அயல்நின்று காப்பதற்கு அமைந்தான். என்ன பெரும் அன்பு இது என்று பாராட்டியவர்களுக்கு முன்னே, அவ்விருவரும் இல்லாமல் தான் மாத்திரம் திரும்பி வந்தான் என்று இகழப்படுவதனினும் வேறு ஒரு குற்றம் உளதோ.]

என்றா யுன்முன் னேவிய யாவு மிசையின்னல்
பின்றா தெய்திப் பேரிசை யாளற் கழிவுண்டேல்
பொன்றா முன்னம் பொன்றுதி யென்றா ளுரைபொ
நின்றா லன்றோ நிற்பது வாய்மை நிலைபம்மா. [ய்பா

[எனது அன்னை, உன் தமையன் இட்ட கட்டளைகளையெல்லாம் செய். அவனுக்குத் துன்பம் நேரிட்டால் பின்வாங்காமல் நீயும் அதனை அனுபவித்து, பெரும் புகழுடைய அத்தமையனுக்கு அழிவு வருமென்று தோன்றினால் அவன் இறப்பதன்முன் நீ இறந்துவிடு' என்று விதித்திருக்கின்றாள். அவ்வார்த்தையைப் பொய்யாக்காமல் நிலைநிறுத்தினாலன்றோ என்னுடைய சத்தியம் நிலை நிற்பதாகும்]

தான் பெற்றிருந்த புகழை, தனதன்னை தந்தனுப்பியசொல்லை, இன்னவையன்ன சிலவற்றைக் காத்தல் கடனாதலின் இராமன் பொன்றத்தான் செல்லல் என்றுந் தக்கதன்றென்ன நினைக்கும் நெஞ்சினால் இவ்விளவீரன் இவைகளை நிகழ்த்துமளவில், முன்னரே உணர்ந்திருக்க வேண்டியவோர் எண்ணம் இப்பொழுது இவனுள்ளத்தில் புதிது பிறக்கலாகின்றது:—

ஓதுங் காலப் பல்பொருண் முற்றுற் றொருவாத
வேதஞ் சொல்லுந் தேவரும் வீயுங் கடைவீயாய்
மாதங் கந்தின் றுய்ந்திவ் வனத்தின் றலைவாழும்
பூதங்கொல்லப் பொன்றுதி போலும் பொருளுண்
[டோ

[சொல்லுமிடத்து, உலகப்பொருள்களெல்லா மழிந்தும் அழியாத வேதங்களால் கூறப்படுகின்ற தேவர்களும் அழிகின்ற கல்பாந்த காலத்திலும் அழிவடையாத நீ, யானைகளைத் தின்று இவ்வனத்தில் உயிர்வாழ்கின்ற ஒரு பூதம் கொல்லச் சாவாய் போலும்; இந்தச்சொல்லில் ஏதேனும் பொருள் உளதோ]

எனவியக்கின்றான். அந்தமில்லா அத் தனிப்பரம்பொருளென இராமனை இங்கு அழைப்பது உண்மையை உணர்ந்ததாலோ, மற்று உபசாரமே யாகவோ, அறிவார் யார். முன் மாயமானாகிய மாரீசனது கூக்குரல் கேட்டு நடுங்கிய சீதைக்கு இதனை இலக்குவன் சென்னான்; அன்னவளோ சற்றேனும்செவிகொடுக்கவில்லை. இராமனோ என்னின் இவனும் முகங்கொடுத்திலன். மற்றென்செய்வான் இலக்குவன். பூதங்கொல்லப் பொன்றுவனென்றே மதித்து,

கேட்டார் கொள்ளார் கண்டவர் பேணார்
கிளர்போரில்
தோட்டார் கோதை சோர்குழ றன்னைத்
துவளாமல்
மீட்டா னென்னும் பேரிசை கொள்ளான்
செருவெல்ல
மாட்டான் மாண்டா னென்றபின் மேலும்
வசையுண்டோ

[இதனைக் கேட்டவர் ஏற்றுக்கொள்ளமாட்டார்; பார்த்தவர்களும் மதிக்கமாட்டார், இதழ்கள் நிறைந்த பூமாலையை அணிந்த தாழ்ந்த கூந்தலையுடைய சீதையை வாடவிடாமல், மிகுகின்ற போரினால்மீட்டுக்கொண்டான் என்கின்ற பெரிய புகழைப்பெறாமலும் போர்வெல்ல முடியாமலும் இறந்தான் என்ற வார்த்தை பிறந்தபின் அதனினும் வேறு பழி ஒன்று வேண்டுமோ]

என மீண்டும் பழையபடியே பேசுவானாகின்றான். எனினும் இக்குரல் மிகவிரைவில் வேறாக மாறிவிடுகின்றது.



"இப்பூதம் ஒருபொருளாக நம்மால் மதிக்கத் தக்கதோ, இச் சிறந்த வாளினால் அதன் வாயையுங் கையையும் யான் துணிக்கும் வண்ணம் காணுதி"

என்னா முன்னே செல்லு மிளங்கோ விறையோற்கு
முன்னே செல்ல முன்னவ னன்னா னினுமுந்தத்
தன்னே ரில்லாத் தம்பி தடுப்பான் பிறரில்லை
அன்னோ கண்டா ரும்பரும் வெய்துற் றழுதாரால்

[என்று முன்னே சொல்லிய இலக்குமணன் இராமனுக்கு முன்னே போக, இராமன் அவனினும் முந்திச் செல்ல, தனக்கு நிகரில்லாத தம்பி தடுப்பவனானான். வேறு ஒருவரும் இல்லை. ஐயோ. இதனைக் கண்ட தேவர்களும் தவிப்படைந்து அழுதார்]

அண்ணனுந் தம்பியும் ஒருவரை யொருவர் எதற்கு முந்தினர்கள் என்பது விளங்கவில்லை. கவந்தனைக் கொல்வதற்கு என்றால், உம்பர் அழுதது ஏன் என வினவவேண்டி நேர்கின்றது. கவந்தனுக்கு இரங்கியோ, அல்லது வெல்லாமல் மரணமே எய்துவார் இவர் என்று இவர்களுக்குத்தான் இரங்கியோ? அல்லது ஒருவர்முன் ஒருவர்சாகத்தான்விரைந்தனரோ? ஐயோ தடுப்பார் பிறரில்லையே என்று வருந்துவதைக் கருதுங்கால், சாகவேகருதிச் சென்றனர் இவரெனச் சிந்தித்தல்வேண்டும். மற்று, இலக்குவன் கவந்தன் கைகளைத் துணிக்கவன்றோ புறப்பட்டனன். மாளவோ மாய்க்கவோ எதுவாயினும் அதனை முன்னரே செய்யப் புக்கிருந்தாராயின் நலமா யிருந்திருக்கும். இப்படலத்தின் பெருமைக்குச் சிறிதும் குறைவின்றி இத்தனை பாசுரங்கள் குறைந்திருக்குமே. சாகத்தான் சென்றார் போலும். ஏனெனில், 'வினையின் எய்திய வீரர் நீர் யாவர்' என்று கவந்தன் தன் வயிற்றிருந்த வாய்திறந்து கேட்டபிறகுதான் இவர்கள் கோபங்கொண்டு அவன்கைகளை வெட்டிவீழ்த்தியது நிகழ்ச்சிமுறை யாகின்றது.

இராகவன் கைதீண்டலும் சாபம்நீங்கிய கவந்தன் பேரெழில் உருவத்தனாகி, கூட்டைவிட்டு வெளிப்பட்ட பறவைபோல ஆகாயத்தில் உயர்ந்து நின்று, இராமபிரானது குணங்களை வாய்திறந்திசைத்துத் தன் புண்ணிய வயத்தால் துதிப்பானாயினன்—

ஈன்றவனோ வெப்பொருளு மெல்லைதீர் நல்லறத்தின்
சான்றவனோ தேவர் தவத்தின் றனிப்பயனோ
மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ
தோன்றி யிருவினையேன் சாபத் திடர்துடைத்தான்

[என்முன் வந்து பெரும்பாவியாகிய எனதுசாபத்தால் நேர்ந்த துன்பத்தை நீக்கிய நீ, எல்லாப்பொருள்களையும் படைத்தவனோ, எல்லையில்லாத நல்ல தருமங்களுக்கெல்லாம் சாக்ஷியானவனோ, தேவர்கள் செய்த தவத்தின் ஒப்பற்ற பயனின் வடிவுடையவனோ, பிரம்மன் விஷ்ணு சிவனென்ற மூன்று பிரிவுகளையுடைய மூலப்பொருளோ]

மூலமே யில்லாத முதல்வனே நீமுயலும்
கோலமே யார்க்குந் தெரிவரிய கொள்கைத்தால்
ஆலமோ வாலி னடையோ வடைகிடந்த
பாலனோ வேலைப் பரப்போ பகராயே

[ஆதி என்பதில்லாத பரம்பொருளே, நீ கொள்ளும் வடிவம் ஒருவராலுந் தெரிந்துகொள்ளக் கூடாததாம். உன் வடிவம் பிரளயகாலத்தில் தோன்றும் ஆலமரமோ, அல்லது அந்த ஆலின் இலையோ, அல்லது அவ்விலையில் படுத்திருந்த குழந்தையோ, அல்லது அக்குழந்தை மிதந்த கடற்பரப்பேயோ]

காண்பார்க்குங் காணப்படு பொருட்குங் கண்ணாகிப்
பூண்பாய்போ னிற்றியால் யாதொன்றும் பூணாதாய்
மாண்பா லுலகை வயிற்றொளித்து வாங்குதியால்
ஆண்பாலோ பெண்பாலோ வப்பாலோ வெப்பாலோ

[பார்ப்பவர்க்கும் பார்க்கப்படும்பொருளிற்கும் ஆதாரமாகி, அவைகளிடத்துப்பற்றுள்ளவன்போல் தோன்றிநிற்பினும் ஒன்றிலும் பற்றுக்கொள்ளாதவனே, உன் பெருமையால் உலகத்தை வயிற்றில் ஒளித்துவைத்திருந்து பிறகு வெளிப்படுத்துகின்றாய், நீ ஆணோ பெண்ணோ அலியோ, அல்லது இம்மூன்றுமல்லாமல் உனக்கென்றுவேறு ஓர் பால் உளதோ]

ஆதிப் பிரமனுநீ யாதிப் பரமனுநீ
ஓதி யுறுபொருளுக் கப்பாலுண் டாயினுநீ
சோதிச் சுடர்ப்பிழம்பு நீயென்று சொல்லுகின்ற
வேத முறைசெய்தால் வெள்காரோ வேறுள்ளார்

[ஆதியாகிய பிரம்மனும் நீயே. ஆதியாகிய பரம்பொருளும் நீயே. சொல்லப்பட்ட அந்தப் பரம்பொருளுக்கும் மேல் ஒன்று உண்டாயின் அதுவும் நீயே. சத்தியத்தை உரைக்கின்ற வேதமானது, நீயே பரஞ்சோதி என்று முறையிடுவதால் மற்றக் கடவுள்கள் வெட்கங்கொள்ளாமல் இருப்பாரோ]

எண்டிசையுந் திண்சுவரா வேழேழ் நிலைவகுத்த
அண்டப் பெருங்கோயிற் கெல்லா மழகுடைய
மண்டலங்கண் மூன்றின்மே லென்று மலராத
புண்டரிக மொட்டின் பொகுட்டே புரையம்மா

[எட்டுத்திக்குக்களிலும் வலிய சுவர் ஆகப் பதினான்கு அடுக்குக்களாக வகுத்துள்ள அண்டமாகிய பெரிய கோயில் முழுவதற்கும் அழகுசெய்கின்ற சந்திர சூரிய நக்ஷத்திர மண்டலங்களுக்கும் மேலுள்ள பரமபதத்தில், ஒருபோதும் மலராத தாமரையரும்பின் உள்ளே உள்ள கொட்டையே உனக்கு இருப்பிடமாகின்றது]

மண்பா லமரர் வரம்பாருங் காணாத
வெண்பா லுயர்ந்த வெரியோங்கு நல்வேள்வி
உண்பாய்நீ யூட்டுவாய்நீ யிரண்டு மொக்கின்ற
பண்பா ரறிவார் பகராய் பரமேட்டி

[பரமேட்டியே, யாராலும் எல்லை காணமுடியாத எட்டுத்திக்குக்களிலும் உள்ள பூதேவர்களாகிய பிராமணர்களால் செய்யப்பட்ட, உயர்ந்த ஓமத்தீ வளர்கின்ற நல்ல யாகங்களில் அவிர்ப்பாகத்தை ஏற்றுக்கொள்பவனும் யஜமானனாக அதை ஊட்டுபவனும் நீயே. இவ்விரண்டு தன்மையும் உன்னிடத்தே ஒத்திருக்கின்ற வகையை யறியவல்லார் யார், சொல்வாயாக]

கொல்லென்று ஏவிக் கொலையுண்டு நிற்கின்ற இவனது அதிரேகமாயைக்கு அவியினை உண்பானும் ஊட்டுவானும் தானே ஆவது ஓர் அதிசயமன்று.

நின்செய்கை கண்டு நினைந்தனவோ நீண்மறைகள்
உன்செய்கை யன்னவைதான் சொன்ன வொழுக்கினவோ
என்செய்தேன் முன்னமறஞ் செய்கை யெய்தினர்
பின்செல்வ தில்லாப் பெருஞ்செல்வ நீதந்தாய்

[உயரிய வேதங்களெல்லாம், உனது செய்கைகளைக் கண்டு அதன்படி நினைத்துச் செய்யப்பட்டனவோ, அல்லது, அவ்வேதங்கள் கூறியபடி உன்னுடைய செய்கைகள்தாம் அமைந்திருக்கின்றனவோ, என்று, எவராலும் துணியமாட்டாத தன்மையை உடைய நீ, அறம் செய்தவர்கள் மீளாத அப் பரமபதசெல்வத்தை எனக்குக் கொடுத்தாய். இதற்கு உரியவனாக நான் இதன்முன் என்ன நல்வினை செய்துளேன்]

மாயப் பிறவி மயனீக்கி மாசிலாக்
காயத்தை நல்கித் துயரின் கரையேற்றிப்

பேயொத்தேன் பேதைப் பிணக்கறுத்த வெம்பெருமா
ஞெயொத்தேனென்ன நலனிழைத்தேனென்ருன்

[பேய்ஒத்த எனது மாயப்பிறவியின் மயக்கத்தை ஒழித்து, குற்றமற்ற சரீரத்தை எனக்குக் கொடுத்து, துன்பக் கடலினின்று என்னைக் கரையேற்றி,அறியாமையால்விளைந்த என் பகைமையை ஒழித்தருளிய எம்பெருமானே,நாய் போன்ற நான், உன் கருணைக்குப் பாத்திரம் ஆகும்படி என்ன நல்வினை செய்துளேன்—என்ருன்]

இன்னவாறு துதித்திருந்தகவந்தனை இராமன் கண்ணுற்று இலக்குவனுக்குங்காட்டி அவனை யாரென்று ஆராயும்படி கூறுதலும், 'யார் நீ' என்று வினவிய அவ்விலக்குவற்குக்கவந்தனுயிருந்தவன்கூறுவான்—

சந்தப்பூ ணலங்கல் வீர
　　தனுவெனு நாமத் தேனோர்
கந்தர்ப்பன் சாபத் தாலிக்
　　கடைப்படு பிறவி கண்டேன்
வந்துற்றீர் மலர்க்கை தீண்ட
　　முன்னுற்ற வடிவம் பெற்றேன்
எந்தைக்கு மெந்தை நீரே
　　யிசைப்பது கேண்மி னென்ருன்

[அழகிய ஆபரணங்களையும் மாலையையும் அணிந்த வீரனே, நான் தனுவென்ற பேருடைய வோர் கந்தர்வன் ஆவேன். ஒரு சாபத்தால் நான் இந்த இழிவான பிறவியை அடைந்தேன். இங்கு வந்துசேர்ந்த உங்களுடைய தாமரைமலர்போன்ற கைகள் தீண்டினமாத்திரத்தில்என் பழைய கந்தர்வ வடிவத்ஸதப் பெற்றேன். என் தந்தைக்குத் தந்தைபோன்றவர்களே, நான் சொல்வதைக் கேளுங்கள் என்ருன்]

என்று, கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவர் இவராயினும், துணையின்றி ஏற்ற கருமம் செய்யஇயலாதென்னும் அறிவினைக்கூறிப் பின்சவரியைத் தலைப்பட்டுச் சுக்கிரீவனை நட்புக்கொள்ளும்படி உரைத்து அகன்றனன். அதிர்கழல் வீரர் தாமும் அன்னதே அமைவதானர்.

கவந்தப்படலம் முற்றிற்று.

---

# காற்று மழை

## Shakespeare—"The Tempest"

### ஆராய்ச்சி

[865-வது பக்கத் தொடர்ச்சி]

ப்ராஸ்ப்பீரோவின் பெருமைக்கும் காதலர்தம் செய்திக்கும் காற்றினும் நுண்ணிய ஏரியலின் கற்பனைக்கும் அடுத்தபடியாய் நம் நினைவு காலிபன்னில் ஊன்றுகின்றது. ஏரியலிற்கு எதிர்ப்புறம் இக்காலிபன். இவன் தந்தை பேயே என்று ப்ராஸ்ப்பீரோ கூறியது உண்மையாயினும், மற்று வெறுத்துக் கூறிய வசையே யாயினும், கொடியவள் ஒரு சூனியகாரியின் வயிற்றிற் பிறந்தானென்பது பொய்யாகா வண்ணந் தீமையே பூண்ட கயவனுயிருந்த இவ்விரூபியை ப்ராஸ்ப்பீரோ நலமுறத் திருத்தமுயன்றதெல்லாம் வீணுயிற்று. மண்ணின் உருவம் மீனின் நாற்றம் பேயின் குணம் கழுதையின் அறிவு புலியின்குரூரம் இத்தனையும் ஒருங்கு திரண்டமைந்த ஒன்றினைப் படைத்து ஓர் பாத்திரமாக்கி நாடகத்தினுள் நடமாட விடுவது ஷேக்ஸ்ப்பியர்போன்ற முதல்திறப் புலமையோர்க்கல்லால் ஏனையோர்க்கு எளியதன்று. எனினும், இவன் மனிதஇனத்தைச் சேராதவன் அல்லன் என்னும் நினைவையும் ஷேக்ஸ்ப்பியர் இந்நாடகத்திடையே காத்துவைக்கின்ருர். காலிபனுக்குக்கொடுத்திருக்கின்ற இம் மானுடத்தொடர்புபற்றி விளைகின்ற முடிவுகள் சில உள.

அச்சமே காலிபனின் ஆசாரமா யிருக்கின்ற குறிப்பினல் அவன்கயமையைக் காட்டுந் திறமையால் ஷேக்ஸ்ப்பியர் திருவள்ளுவரோடு ஒத்த உணர்வினர் ஆகின்ருர். இவ்வகையில் காலிபன் மனிதரிடையே உறவினர் குறைவறப் பெற்றுளன். கீழ்மக்களின் அச்சம் அனைத்தும் உடலின் வலியைப்பற்றி நிகழுமேயன்றி, தன் நெஞ்சே தன்னைச் சுடுமே என்ற அச்சத்தினல் அன்னவர் அடங்கமாட்டார். எனின், தீவினையச்சமொன்றும் அவர்பால் எதிர்பார்த்தற் கியலாது. மிராண்டாவின் மானத்தையும் ப்ராஸ்ப்பீரோவின் உயிரையும் சிறிதுங் கூசாமல் அழிக்கப்புகுவான் இக் காலிபன்.

ப்ராஸ்ப்பீரோ:—கசையடிக்கன்றி அன்பிற்கோ அசையாத ஏ பொய் பெரிதுடை யடிமையே! ஊத்தையே நீயாக, உன்னை யான் மானுடப்பரிவுடன் நடத்தி, என் மகவின் மானத்தைக் கெடுப்பதற்கு நீ நாடியவரையில் உன்னை என் குகையிலேயே வைத்துக்கொண்டிருந்தேன்.

காலிபன்:—ஓஹோ! ஓஹோ! செய்து அதனைத் தீர்த்திருந்தா லாகாதா! தடுத்தனை என்னை நீ; இல்லையேல் இத்தீவினைக் காலிபன்களால் குடிமய மாக்கியிருப்பேனே.

—அங்கம் 1. களம் 2. பக்கம் 311.

இவ்வண்ணம் இரக்க மின்மையோடு கழிவிரக்கமுங் கொள்ளாமல், செய்ய நினைத்த கொடுமையைக் கொண்டே தன் சிறப்பைச் சாதிக்கு மிது கயமையினுங் கடையாய கயமையாம். இத்தகைய கயவர்தம் கைகளில் கொடியதோர் கருவியாவது கல்வி. கல்லாதபேர்கள் நல்லவர்களாக இருக்க இயலும். மற்று, கயவர் கற்றக்கால் அவர் பொல்லாதவரும் ஆகாமல் நிற்பதரிது:—

நீ எனக்குப் பாஷை கற்பித்தாய்; அதனுல் யான் பெற்ற இலாபம் உன்னை எவ்வாறு சபிப்பதென்பதை அறிவதே.

—அங்கம் 1. களம் 2. பக்கம் 311.

என்றனன் காலிபன். நம்மிற் கற்றவர் எத்தனைபேர் பிறரை வாழ்த்துவதற்கு அக்கல்வியைப் பயன்படுத்துகின்றனர் என்பதை எண்ணிப்பார்க்குங்கால், மடக்கிய விரல்கள் விரியமாட்டாமல் கிடக்கின்றதைக்கண்டு காலிபனுக்கு இக்காலம்உள்ள உறவினர் தொகுதியை ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம்.

கயமை இதுவாயின் அதன் நினைவும் செயல்வகையும் வெளிப்படும் தன்மையைக் கருதுங்கால் நம்மிடையே நடமாடும் நாகரிகத்தைக் கண்டு பெரிதும் வெள்கி வருந்தவேண்டி வருகின்றது.

என்னிடத்தி லிருந்து நீ கவர்ந்தகொண்ட இந்தத் தீவானது, என் தாயான ஸைக்கொராக்ஸினுல் என்னுடையது.

—அங்கம். 1. களம் 2. பக்கம் 294.



உரிமையும் உடைமையும் உன்னியுன்னிப் பேசும் இதுவே கயமையின் வாய்பாடு. எத்தனை பெரிய பெயர்கள் வைத்து வழங்கினுலும் இவ்வாய்பாடு காலிபனது கயமையையே காட்டும் என்பதை ஷேக்ஸ்பியர் வற்புறுத்து மிது குறிக்கொள்ளத் தகுந்தது. நாகரிகம் மிகுந்த இந்நாட்களில் பேச்சும் பேச்செல்லாம் இவ் வாய்பாட்டினுள் அடங்குகின்றதென்ருல், உலகமே இன்று காலிபன்மய மாகிவிட்டதோ வென்று கருதவேண்டி வருகின்றதே. இதனோடு ஷேக்ஸ்ப்பியர் இச் செய்தியை விடவில்லை; விடுதலை முயற்சியையும் இணைக்கின்ற நுண்மையால் அவர் வித்தகத்தின் அருமை அதிகமாகின்றது. இதுகாறும் கயமையுந் தானுமாய்க் கட்டித்தழுவிக் கிடந்த காலிபனைத் தட்டியெழுப்ப நகரத்திலிருந்து வருகின்ருர், இருவர். குடிகார பட்லர் ஸ்ட்டிபானோவையும் கோமாளிக் கூத்தன் ட்ரின்குலோவையும் கண்டவுடன் காலிபன் அவர்தமைச் சுற்றமாய்ச் சூழ்ந்துகொண்டு விடுகின்ருன்.

இயற்கைக் கயமையும் நாகரிகத் தீமையும் ஒன்று சேர்கின்றன. நாகரிகக் கோலமுடன் நடமாடுகின்றவைகளை மனிதர் பாராட்டப் புகுவதெல்லாம் அதனுள் அடங்கிய சிற்றின்பங்களை நச்சியே யன்றி வேறன்று. ஸ்ட்டிபானோவின் கையிருந்த சாராயபுட்டியே அவனைக் காலிபனுக்குத் தெய்வமாக்கியது. விடுதலை வேண்டி ஆரவாரம் செய்யுமொரு வீரனும் ஆயினுன். குடிவெறி விக்கல்களுக்கிடையே இனி இவன் கக்கக் காலிபன். இனி இவன் அந்தக்"கொடியோன்" ப்ராஸ்ப்பீரோவிற்கு ஆட்செய்ய மாட்டான். விடுதலை பெறுவான். அவ் விடுதலைதான் யாதோவெனின், ப்ராஸ்ப்பீரோவைக் கொன்றுவிட்டு ஸ்ட்டிபானோவின் கால்களை நக்கிக்கிடப்பது. இக்காலம் விடுதலை சுதந்தர முயற்சிகள் எல்லாம் அரசனைவிற்று அடிமைகளைத் தலைவர்களாக ஆக்கிக்கொள்வதே யல்லாமல் வேறு ஒன்றுமன்று என்ற வாசகம் காலிபன் சரித்திரத்திலும் பொய்யில்லை, மற்று எச்சரித்திரத்திலும் பொய்யில்லை.

வேலையாள் விரூபி! இந்தத் தீவின் பித்தம்! ஐந்து பேர்களே இந்தத் தீவில் இருக்கிருர்களென்று கூறப்படுகின்றது. அவர்களில் மூவர் நாம்; மற்ற இருவரும் நம்மையே போன்ற மூளையின ராவாராயின் இந்த இராச்சியந் தள்ளாடுகின்றது.

—அங்கம் 3. களம் 2. பக்கம் 587.

என்று ட்ரின்குலோ அன்று கூறினுன்.பழுதில்லாதது ஐந்தில் இரண்டுகூட இப்பொழுது இல்லாமையால் எல்லா இராச்சியங்களுந் தள்ளாடுகின்றன.

இனி, அக் காலிபனுக்கு உதவிசெய்யவந்த ஸ்ட்டிபானோவும் ட்ரின்குலோவும், விடுதலை சுதந்தரங்கள் வாங்கித்தர வரும் மற்றெல்லோரும் செய்வதையே செய்தனர். புறப்படுமுன்னரே, தன் கட்சியில் சேர்ந்த ட்ரின்குலோவிற்கு ஸ்ட்டிபானோ தலைவனுகிவிடுகின்ருன். காலிபனை அடிமையாகவும் மிராண்டாவை மனைவியாகவும், அத் தீவினைத் தன்னுடையதாகவும் கொள்ள வேண்டுமெனும் ஊக்கமன்றி வேறொன்றும் ஸ்ட்டிபானோவைத் தூண்டவில்லை. இதன்பொருட்டுத் தூங்கிக்கொண்டிருந்த ஒருவன் தலையில் கல்லைப் போடவும் கூசினு ரல்லர். யார் தலையிலேனும் கல்லைப் போட்டுச் சிலர் சிலவற்றை அடைவதற்கே கட்சிகள் சேர்கின்ற தன்மையை ஷேக்ஸ்ப்பியர் ஐயமற அறிந்திருந்தார். பிறகு, எல்லாக் கட்சியும், விடுதலைசுதந்தர முயற்சிகளும் முடிவதேபோல் பகட்டாடைகளனைய சிறிய சுயலாபங்களுக்கு ஒருவரோடு ஒருவர் பூசலிட்டுச் சேற்றில் ஆழ்கின்றனர். இற்றைநாள் அரசியல் ஆரவாரங்களில் எப்பக்கம் திரும்பினுலும் காண நிற்பது இந்தக் காட்சியே. இதனில், நாகரிகக் கயவர் ஸ்ட்டிபானோ ட்ரின்குலோக்களைக் கண்ட கண்ணிற்கு நாகரிகமற்றக் காட்டுமிருகாண்டிக் கயவன் காலிபனே மேலெனத் தோன்றுகின்ருன். காலிபனது அறிவில் பத்திலொரு பங்கு அவர்களுக்கு இல்லை. கருமத்தை விட்டுக் கந்தைத் துணியைப் பற்றவேண்டா வென்று தடுத்தவன் காலிபன்.

இந்தக் குடிகாரனைக் கடவுளாகக் கொள்ளவும் அந்த முழுமூட மந்தியை வணங்கவும், என்ன, யானொரு மூவிரண்டுமுறைக் கழுதையா யிருந்தேன்.

—அங்கம் 5. களம் 1. பக்கம் 813.

என்னக் காலிபன் இறுதியிலேனும் தான் கழுதைஎன்பதைத் தெரிந்துகொண்டான். அதற்கும் அவ்விருவர் வகையற்ற மூடர்.

இந்த ஸ்ட்டிபானோவும் ட்ரின்குலோவும், இழிந்த தொழிலினரேனும், நாகரிக சித்திரத்தில், மேலினத்தவர்கள் என்றுகருதப்படுபவர்தம்பிரதிபிம்பங்களே. ஆலான்ஸோவும் அன்டோனியோவும் ஸபஸ்ட்டியனும், பட்லரும்கோமாளியுமாகப் பிறந்திருந்தால் எவ்வாறு தோன்றுவார்கள் என்பதை ஷேக்ஸ்ப்பியர், ஸ்ட்டிபானோவையும் ட்ரின்குலோவையுங் கொண்டு காட்டுகின்றனர். ப்ராஸ்ப்பீரோவைக் கொன்று அத்தீவிற்கு அரசனுகச் சூழ்ந்தசதியின் இச்சரித்திரம்,ஸபஸ்ட்டியனும் அன்டோனியோவும் அலான்ஸோவைக்கொல்ல முயன்ற சதியையும், முன்னர் இம்மூவரும் சேர்ந்து ப்ராஸ்ப்பீரோவைக் கெடுத்த சதியையும் ஒக்கும்.

---

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
I.D.L.ச்யாவனப்ராசா I.D.L.பிருங்காமலக.தைலம் கோரோஜன மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
I.D.L.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைகோசுந்த சிற்றமணக்கு எண்ணை காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக் ஜுரம் எவ்வித ஜுவரங்களுக்கும்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

# வர்த்தமானம்

செட்டிநாட்டுக்

## கலாநிலயக் கல்விக் கழகம்.

இக் கழகத்தின் அடுத்த வகுப்பு கானாடு காத்தானில் மார்ச்சு மாதம் 17, 18-ம் தேதிகளிற் கூடும். (சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை.)

அவ்விரு தினங்களிலும் மாலை 6 மணிக்குக் காரைக்குடியில், S. M. S. ஹைஸ்கூல் கட்டிடத்தில் ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர், B.A., B.L., கம்பராமாயணக் கட்டுரைகள் நிகழ்த்துவார்.

---

உலக மணிக் கூண்டு:—இலங்கை தெவிமெலச் சுதேசப் பாடசாலைத் தலைமை ஆசிரியரான மிஸ்டர் எச்யூபெரீரா என்பவர் ஒரு நூதனமான மணிக்கூண்டைச் செய்திருக்கிறார். அந்த மணிக்கூண்டு உலகத்தில் பல்வேறு பாகங்களிலுள்ள நேரத்தைஒரே சமயத்திற் காட்ட வல்லதாகும். இங்கிலாந்து, பம்பாய், காபுல், ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா முதலாய இடங்களில் ஒரே சமயத்தில் என்ன நேரம் என்பதை அம்மணிக்கூண்டிலிருந்துபார்த்தறியலாம்.

* * *

இறந்தவர் எழுந்தார்:--பல்கேரியாவில் சாவோ இக்னேஷியஸ் என்னும் 83 வயதுள்ள வயோதிகர் திடீரென மரண மடைந்தார். அவரை அடக்கஞ் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். அவர் பந்து மித்திரர்க ளெல்லோரும் ஏராளமான பூமாலைகளைக் கொண்டுவந்து அவர்மீது தூவிப் பிரேதத்தை அலங்கரித்தார்கள். அவரை அடக்கஞ் செய்வதற்கு இன்னும் 3 மணிநேரங்களே இருந்தன. உற்றார் உறவினர் அனைவரும் அவரைச் சூழ்ந்து நின்றுகொண்டு பிரேதத்தை நோக்கிக்கொண்டிருந்த சமயத்தில் திடீரென அந்த வயோதிகர் தேகம் நடுங்கி ஒரு குலுக்கு குலுக்கியது. மறு நிமிஷத்தில் கிழவர் கண்களைத் திறந்தார். அங்குள்ளவர்களில் சிலருக்குப் பயம். வேறு சிலர் ஆச்சரியமடைந்தனர். கிழவர் உயிர் பெற்றது டாக்டர்களுக்குக்கூடப் பெரிய வியப்பாக இருந்தது. ஆகவே அவர்கள் அவரைச் சோதித்துப் பார்த்தார்கள். அவருடைய வயிற்றில் இரத்தம் கட்டியாகத்திரண்டு மேலேறிச்சுவாசத்தை அடக்கிக்கொண்டதென்றும் அதனால் வயோதிகர் இறந்தனரென்றும், சுமார் 21 மணிநேரம் அப்படியே அடைத்திருந்த அந்த இரத்தக் கட்டி கொஞ்சங்கொஞ்சமாகக் கரைந்துவிடவே மீண்டும் சுவாசம் வர இரத்த ஓட்டம் ஓட ஆரம்பித்து, வயோதிகர் உயிர் பெற்றாரென்றுந் தெரிந்துகொண்டனர்.

* * *

எலி பிடிக்கும் தம்பதிகள்:—இங்கிலாந்தில் ரீடிங் என்னும் ஊரில் வசிக்கும் ஏ. இ. வில்லியமஸ் என்பவரும் அவர் மனைவியும் ஊர் ஊராகச் சென்று எலிகளைப் பிடிப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். க்ளஸ்டெர்ஷயர் என்னும் ஊரில் மாத்திரம் இவர்கள் 2 வாரங்களுக்குள் 15,000 எலிகளைப் பிடித்துக் கொன்றிருக்கின்றனர். அவ்வூரில் போஜன காலம் முடிந்ததும் எறியப்படும் ரொட்டித் துண்டுகளையும் ஆகாரங்களையும் இவ்விருவரும் சேர்ந்து திரட்டுவார்கள். அவற்றைத் தூண்டிதலாகக் கொண்டு எலிகளைப் பிடிப்பது வழக்கம். இந்த வேலை கிடைப்பதற்கு அவர்கள் செய்த யுக்தி மிகவும் விசித்திரமாகவிருக்கிறது. மனைவியானவள் ஒரு எலியை வைத்துக்கொண்டு ஜனங்கள் கூடுமிடத்தில் உட்காருவாள். அந்த எலி அவள்மீது தாவி விளையாடுவதைப் பார்க்க ஜனங்கள் கூடிவிடுவார்கள். உடனே கணவன் எலிகளின் தொல்லைகளைப் பற்றிப் பிரசங்கம் செய்து, கூலி கொடுப்பவர்கள் வீட்டிலிருக்கும் எலிகளைப் பிடித்துவிடுவதாகக் கூறுவார். ஜனங்கள் உடனே அவர்களை வேலைக்கு நியமித்துக்கொள்வார்களென்று 'ஸண்டே எக்ஸ்பிரஸ்' கூறுகிறது.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

கோடையின் கொடுமை
நீங்கள் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட
எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா?
மூளையைக் குளிரச்செய்து கை கால் கண்களின்
எரிச்சலைச் சமனஞ்செய்து தலை மயிரை நீண்டு
வளரும்படி செய்யும். உடனே வாங்கி
உபயோகியுங்கள்.
5 துலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.
இனும்! கேட்லாக். இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)